ராகமாலிகா
என இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
கோபிகா
ஆடை அகம்
என பெயர்
மாற்றப்பட்டுள்ளது
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

மக்களின் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

முகூர்த்த பட்டு புடைவைக்கு
சகல விதமான
காஞ்சிபுரம் சேலை
பட்டு வேட்டி கூறை சாறி
பனாரிஸ் சேலைகளுக்கும்
சிறந்த ஒரே இடம்
கோபிகா
ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 24 வெள்ளிக்கிழமை (07 - 04 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 131

# விடுதலைப் புலிகளுடன் பேசிய பின்னரே அதிகாரப்பரவல் குறித்து முடிவு செய்யப்படும்

## அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 7

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசியல் தீர்வு குறித்துப் பேசிய பின்னரே, அதிகாரப் பரவல் குறித்த விடயங்களை புதிய அரசமைப்பில் சேர்ப்பது குறித்து அரசாங்கம் முடிவு செய்யும்.

இவ்வாறு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தகவல் வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளின் கருத்தை அறிந்து கொள்ளாமல் அதிகாரப் பரவல் குறித்து முடிவு செய்வதால் பயன் எதுவுமில்லை என்றும் அவர் சொன்னார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் பிரதான நோக்கத்துடன் அரசாங்கம் அரசமைப்புச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளவுள்ளது தெரிந்ததே.

அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து அமைச்சர் பீரிஸ் தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆராய்ந்து வருகிறது.

இக்குழுவின் முன்னிலையில் அரசியல் கட்சிகள் பலவும் தமது யோசனைகளைத் தெரிவித்துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இன்னும் தனது யோசனைகளைத் தெரிவிக்கவில்லை. இம்மாதம் 19 ஆம் திகதி வரை யோசனைகளைத் தெரிவிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

அப்போது, அதிகாரப் பரவலாக்கம் குறித்து கருத்திணக்கம் ஏதாவது உண்டாகியிருக்கிறதா என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேசிக்கொண்டிருக்கிறது. அரசியல் விவகாரம் குறித்து விரைவில் பேசவுள்ளோம். எனவே அவர்களின் நிலைப்பாட்டை யோசனைகளைத் தெரிந்து கொண்ட பின்னரே அதிகா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பதில் கடிதம் நேற்று அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த முதலாம் திகதி விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கு அனுப்பிய கடிதத்துக்கு நேற்று பதில் அனுப்பப்பட்டுள்ளதாக அறியவந்தது.

4 ஆம் கட்டப் பேச்சுக்களை 8 ஆம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்கும் இடையில் நடத்த வசதியாக ஒரு திகதியை குறிப்பிட்டுத் தருமாறும் —

அந்த திகதிக்கு அரச குழுவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதாகவும் — ஜனாதிபதி சந்திரிகா தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் நேற்று அனுப்பிய பதிலின் விவரம் தெரியவரவில்லை. (இ-3)

## குடாநாட்டு வெப்பநிலை குறைந்து வருகிறது

மார்ச் மாதம் 23 ஆம் திகதியில் இருந்து அதிகரித்து வந்த வெப்பநிலை தற்போது குறைந்து வருகிறது.

இந்த மாதம் முதலாம் திகதியே ஆகக் கூடுதலான வெப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம்மாதம் முதலாம் திகதி 35.3 செல்சியஸ் அதியுயர் வெப்பநிலை பதிவாகியுள்ளது. 2 ஆம் திகதி 34 செல்சியசும், 3 ஆம் திகதி 31 செல்சியசும், 4 ஆம் திகதி 33.3 செல்சியசும், 5 ஆம் திகதி 33 செல்சியசும் பதிவாகியுள்ளது.

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் கணிப்பீடுகளில் இருந்து இந்த விவரங்கள் தெரிய வந்தன.

இதேவேளை நேற்றுக் காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் குடாநாட்டில் 5.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. ஜனவரி மாதம் 184.8 மில்லி மீற்றரும், பெப்ரவரியில் 31.3 மில்லி மீற்றரும், மார்ச்சில் 9.8 மில்லி மீற்றரும் மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்படலாம்

கொழும்பு, ஏப். 7

அடுத்த மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் 3 மாதங்களுக்கு பிற்போடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள விகிதாசாரத் தேர்தல் முறைக்குப் பதிலாக புதிய முறையின் கீழ் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு அரசு ஆலோசித்து வருவதாகவும்—

அதற்குத் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் எதிர்வரும் ஓகஸ்ட் அல்லது செப்ரெம்பர் மாதத்தில் புதிய தேர்தல் முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக 'லங்காதீப' பத்திரிகை நேற்றுத் தெரிவித்தது. [இ-6]

## மின்னலுக்கு இளைஞன் பலி

மயிலணி, ஏப் 7

குளித்துக் கொண்டிருந்த இளைஞன் மின்னலுக்குப் பலியான சம்பவம் நேற்று நண்பகல் சுன்னாகம் ஐயனார் கோவில் வீதியில் இடம் பெற்றது.

பிரஸ்தாப இளைஞன் தண்ணீர் அள்ளுவதற்காகப் பயன்படுத்திய இரும்பாலான "செயின்" மற்றும் கப்பியில்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



"பக்ஸ்" வசதி இல்லை எண்டு சொல்லுவினம் போலை ... !!

## அரச அதிபர் ஊடாக அனுப்பிய மகஜர் ஜனாதிபதியை சென்றடையவில்லை

### பாதிக்கப்பட்ட மாணவரிடம் சந்திரிகாவே தகவல்

வெட்டுப்புள்ளி முறையால் பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மாணவர்கள் தமக்கு நீதிவழங்கக் கோரி, பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தி, ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதற்காக — ஜனாதிபதிக்கு முகவரியிட்டு — யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலத்திடம் ஒப்படைத்த மகஜர் மூன்று வாரங்களாகியும் ஜனாதிபதியைச் சென்றடையவில்லை.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரதிநிதிகள் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகாவை நேரடியாகச் சந்தித்துப் பேசிய போதே இந்த விடயம் அம்பலத்துக்கு வந்தது.

தமக்கு இழைக்கப்படும் அநீதி நீக்கப்படவேண்டும் என்று கோரி யாழ்ப்பாணத்தில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை பாதிக்கப்பட்ட மாணவர்கள் நடத்தினார்கள். ஜனாதிபதிக்கு யாழ் அரச அதிபர் மூலம் மகஜர் அனுப்பினார்கள். எதுவுமே நடக்கவில்லை.

தமது முயற்சியைக் கைவிடக்கூடாது என்று கருதி கொழும்பு சென்றார்கள். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிறு,சிறு சம்பவங்கள் நிகழ்ந்தாலும் மோதல் தவிர்ப்பு மீறப்படவில்லை

### நாடாளுமன்றத்தில் அனுருத்த ரத்வத்த

அம்பாறை, ஏப். 7

சிறு, சிறு சம்பவங்கள் நிகழ்ந்தபோதிலும் வடக்கிலும் கிழக்கிலும் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை இது வரை மீறப்படவில்லை.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கிலும் கிழக்கிலும் இலங்கையின் ஏனைய சில பகுதிகளிலும் அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பது தொடர்பான பிரேரணை நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

பிரேரணையை நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினையை தீர்வுக்குக் கொண்டுவர ஆரம்பிக்கப்பட்ட சமாதானப்பேச்சுவார்த்தைகள் விரைவில் மீண்டும் இடம்பெறும் என அரசு எதிர்பார்க்கிறது

தற்போதைய பிரச்சினை காரணமாக அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்படும் வரை அமைதி வடக்கு கிழக்கில் நிலவுவது அவசியம்.

பாதுகாப்பு படையினரும் பொலீஸாரும் இவ்வாறு அமைதியைப் பேணுவதற்கு சாதாரண சட்டங்கள் போதுமானவை அல்ல எனவே அவசரகால சட்டப் பிரமாணங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவின் மனு மேல் நீதிமன்றத்துக்கு

சென்னை, ஏப். 7

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தாக்கல் செய்த ரிட் மனுவை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஏ. சிவராஜ் பட்டேல் மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பியுள்ளார்.

இந்த வழக்கில் கணிசமான சட்ட அம்சங்கள் இடம்பெற்றிருப்பதே இதற்குக்காரணம்.

இதற்கு ஏதுவாக முதலில் தலைமைநீதிபதியிட வழக்கு ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு திரு. ஏ. சிவராஜ் பட்டேல் உத்தரவிட்டுள்ளார்.

## ஜெயலலிதாவை பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகள் கூட்டாக போராட்டம்

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவைப் பதவி விலகச்செய்ய கூட்டாக போராட்டம் நடத்தப்போவதாக இந்திரா காங்கிரஸ் தவிர ஏனைய எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

இது சம்பந்தமாக தி. மு. க. தலைமையிலான கூட்டமொன்று நேற்று சென்னையில் நடந்தது. இந்தக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஜனதாதளம், எம். ஜி. ஆர். அ. தி. மு. க, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய நஷனல் லீக் ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன.

இந்தக் கூட்டு எதிர்ப்புப் போராட்டம் ஏப்பிரல் 21 திகதி மதுரையில் ஆரம்பித்து வைக்கப்படும் என தி. மு. க தலைவர் டாக்டர் மு. கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார் [இ-7]

## புலிகளால் விடுதலை செய்யப்பட்ட பொலீஸாரும் பாதயாத்திரையில்

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள சமாதான பாதயாத்திரையில் விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட பொலீஸ்காரர்களில் இருவர் கலந்து கொள்ள இருப்பதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

சமாதானம், வேண்டி அக்கரைப் பற்றில் இருந்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பங்குபற்றும் இந்த பாதயாத்திரை எப்போது ஆரம்பிக்கும் என்று ... வில்லை.

## பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க திருச்சபைகள் மன்றம் கோரிக்கை

கொழும்பு, ஏப் 7

முன் நிபந்தனைகளை விதிக்காது சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு உலக திருச்சபைகள் மன்றம் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கை மக்கள் குறிப்பாக வடபகுதி மக்கள் இனப்பிரச்சினை காரணமாக எழுந்த தகராற்றினால் பெரும் அல்லல் பட்டுள்ளார்கள் என்றும் —

நாட்டில் நீண்டகால இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை மன்றம் வரவேற்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-7]

## ஆசிரியர் கஷ்டப்பிரதேச அலவன்ஸ் இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 7

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேச அலவன்ஸ் ஏப்ரல் முதலாம் திகதி முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளர் கே. தியாகராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று வடக்கு- கிழக்கு மாகாணத்தின் சகல கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [இ-7]

## 'சயனைட்' அருந்திய இளைஞர் பலத்த பாதுகாப்புகளுடன் சிகிச்சை பெற்று வருகிறார்

கொழும்பு, ஏப். 7

வெள்ளவத்தையில் பொலீஸார் கைது செய்ய முற்பட்ட சமயம் "சயனைட்" அருந்தி தற்கொலை செய்ய முயன்ற மானிப்பாயைச் சேர்ந்த அன்ரன் சுரேஷ் அல்லது யேசுதாசன் என்ற இளைஞர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொழும்பில் உள்ள சில தமிழ் அரசியல் வாதிகளைக் கொலை செய்வதற்காக இவர் கொழும்புக்கு வந்தார் என கூறப்பட்ட போதும் பொலீஸார் அதனை உறுதி செய்யவில்லை.

இவரோடு மேலும் பலர் கொழும்புக்கு வந்திருக்கலாம் என சந்தேகிக்கும் பொலீஸார் அவர்களைக் கண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவின் மேதினக் கூட்டம் கண்டியில் நடத்த அனுமதி மறுப்பு

கொழும்பு, ஏப். 7

ஐ. தே. கவின் மே தினக் கொண்டாட்டங்களை இம்முறை கண்டியில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

... காரணங்காட்டி மேதினக் கூட்டத்தை கண்டியில் நடத்த முடியாது என பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அவசர காலச் சட்டம் நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதி ... கொழும்பிலும் மட்டுமே அமுலிலுள்ள இவ்வேளையில் கண்டியில் பாதுகாப்புப் பற்றிய பிரச்சினை உண்டெனப் பொலீஸார் தெரிவிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசைச் சாடியுள்ளார்.

அரசு எதிர்க் கட்சிகளின் மேதினக் கூட்டங்களை வேண்டுமென்றே தடைசெய்ய முனைகின்றது. இது முற்று முழுதான ஒரு ஜனநாயக விரோத செயல் என்றும் அவர் தெரிவித்துள்ளார். [இ-7-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிறு திருத்தம்செய்து பாவிக்கக்கூடிய போட்டோஸ்ரற் மெஷின், ஒருசோடி கூட்டுடன் ஐந்து மாதங்கள் நிரம்பிய சில்க்கி கோழிகள், செனலக்ஸ் காலாலும், மோட்டராலும் இயக்கக்கூடிய சைக்கிள் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். செல்வி பத்மநாதன், இல. 21, ராதாலேன், ஓட்டுமடம். [36085]

அழகிய கறுப்பும் பிறவுனும் நிறமுடைய ஆண், 2 வயது பொமனேரியன் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: Y. சிவகரன், 157/1, O.L.R. லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [36072]

இறக்குமதி செய்யப்பட்ட 'B' வெங்காய விதை விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், இல. 251, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [36088]

## கோழிக்குஞ்சு விற்பனை

செற்றா பாம் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், கோல்டன் கொமற் சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சிந்து பல்பொருள் விற்பனை நிலையம், திருநெல்வேலிச் சந்தி. [36039]

## வினஸ் அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு T.V. அன்ரனா பொருத்துதல், பழுது பார்த்தல், T.V. டெக், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்வதற்கு வினஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-649]

## தவறிவிட்டது

3-4-95 அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து தெற்கு சிவசக்தி கோயிலடிக்கும் இடையில் 1¼ பவுண் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ப. ச. யோகராஜா, "செங்கமலம்", அச்சுவேலி வடக்கு என்ற முகவரிக்கு ஒப்படைக்குமாறு கேட்கின்றேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [8469]

## இலகு திருமண சேவை

31 வயது, விசாகம், செவ்வாய் 7, கனடாவிலுள்ள படித்த மணமகளுக்கு ஏற்ற மணமகன் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் தேவை. தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (36038)

## பயிற்சி வகுப்புக்கள்

கேக் அலங்காரம், வெல்ல மலர் அலங்காரம், மேலைத்தேய ஐசிங் வகைகள், சமையற் பாகங்கள், பூ செய்தல், பின்னல் வேலைகள் தலை அலங்காரமும் ஒப்பனை முறைகளும். ஆரம்பம்: 9-4-95 காலம் 4—6 கிழமைகள். திருமதி யோகினி சண்முகநாதனிடம் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். பதிவு செய்க செல்வி ம. கிருஷ்ணபிள்ளை, பொன்மொழி பாரகம், வதிரி, கரவெட்டி. [சி-907]

## மாறிய சைக்கிள்

5-4-95 அன்று யாழ். மாவட்ட தமிழீழ நீதிமன்று வளவில் J 2209232 இலக்க லுமாலா மகளிர் சைக்கிளுக்கு பதிலாக ஏஷியா மகளிர் சைக்கிள் மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஏஷியா சைக்கிள் உரிமையாளர் தயவு செய்து தொடர்புகொள்ளவும். K. T. நடராசா, அச்செழு, நீர்வே. (36089)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளுக்கும் வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்புகொள்ளவும். S. ஜெயராஜா 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். [8468]

## வகுப்புகள்

கேக் ஐசிங், மாச்சிலி அலங்காரம், Fondant Icing, ஒப்பனைக்கலையும், தலையலங்காரம், பூ அலங்காரங்கள், மலர்ச்செண்டுகள் தயாரித்தல் [Silk Ribbon, Stocking Net, Bouquets] புதிய வகுப்புக்கள் 16-4-95 முதல் ஆரம்பமாகிறது. தொடர்பு: Yogi Home Science Academy நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி), நல்லூர். (சி 634)

## குளிர்சாதனப் பெட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப் 7

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கென மூன்று குளிர்சாதனம் பெட்டிகளை சுகாதார அமைச்சு அனுப்பிவைத்துள்ளது.

இந்தக்குளிர்சாதனப்பெட்டிகள் கப்பல் மூலம் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. (ஐ-17)

---

உ

அளவெட்டி - நாகேஸ்வரம்

ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்

# ஸ்ரீராம நவமித் திருவிழா

நிகழ்ச்சிகள்

மு. ப. மணி 7-00 நவோத்தரசத கலச சங்காபிஷேகம்

மு. ப. மணி 10-30 விசேட பூசைகள்

மு. ப. மணி 11-30 சிறப்புச் சொற்பொழிவு "ஸ்ரீராமன் மகத்துவம்"

நிகழ்த்துபவர்:
சிவசுரபி ஆறு. திருமுருகன் B. A. அவர்கள் (கம்பன் கழகம்)

பகல் மணி 12-30 வசந்தப்பூசையும், திருவீதி உலாவும்

★ அடியார்கள் அனைவரையும் பங்குபற்றித் திருவருள் பெறுமாறு வேண்டுகிறோம்.

— பொ. ப. சபை

அன்பளிப்பு:
திருமாட்டி புடைவைக் கடல்
யாழ்ப்பாணம்.
[சி-963]

---

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி

துடுப்பாட்டப் பிரியர்களே!

எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில்
யாழ். இந்து மைதானத்தில்
எட்டுக் கழகங்கள் பங்குகொள்ளும்

# வெற்றிவிழா சுற்றுப் போட்டி

இடம்பெறும்

1994ஆம் ஆண்டு கழகங்களின் நட்சத்திர வீரன் யார்?

1995ஆம் ஆண்டு கல்லூரிகளின் நட்சத்திர வீரன் யார்?

இவை போன்ற பல கேள்விக் கணைகளுக்கு விடை சுமந்து வரும் இவ் வெற்றிவிழாவில் நீங்களும் கலந்து மகிழ உங்களை அன்புடன் அழைக்கிறார்கள்.

துடுப்பாட்ட ரசிகர் சங்கம்
(36082)

---

# இந்திர விழா
## இம்முறை நடைபெறாது

சித்திரை 2ஆம் திகதி (15-04-95) அன்று சந்திர கிரகணம் கூடுவதால் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தீர்த்தோற்சவ இரவுத் திருவிழாவாகிய இந்திரவிழா நடைபெறமாட்டாது என்பதை மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

— மோர்மட வரவேற்புக் குழு

நெடியகாடு,
வல்வெட்டித்துறை. [36068]

---

# சான்றோனே சிவா!

பிறப்பு: மனிதனின் முதலாம் பக்கம்
இறப்பு: மனிதனின் இரண்டாம் பக்கம்
சிறப்பு: மனிதனின் மூன்றாம் பக்கம்

பிறந்தவன் இறக்கிறான், இருந்தவன் மறக்கிறான்
சிறந்தவன் தினமும் எம் நினைவிலே பிறக்கிறான்!
மூன்றாம் பக்கத்துக்கு உரிய மனிதனே!
சான்றோனே 'சிவா'! சந்ததம் வாழுவாய்!

— சத்தியசிலன்

[36076]

---

முத்துமாரியம்மன் துணை


ஓதுவார்

வைத்திலிங்கம் காசிப்பிள்ளை

அவர்களின்

100ஆவது பிறந்த ஆண்டு

# நினைவஞ்சலி



★ திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் வைகாசி விசாகப் பொங்கல் நாயக வளந்தெடுத்தலை 150 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த திருநெல்வேலி கிழக்கு சமரபாகுதேவன் வளவு "கல்வீட்டார்" நாகப்பர் வைத்திலிங்கம் அவர்களின் ஐந்தாவது மகனும்

★ நாயக வளந்துக் கருவூல நிதியின் கூடுதலான பங்கு தாரரும் வளந்து உரிமைகாரரும்

★ இந்நிதியை 1955ஆம் ஆண்டில் ஆரம்பித்த வைத்திலிங்கம் தம்பையா அவர்கள் 1951—05—02 திகதியிட்ட தமது மரணசாதனத்தால் "தத்துவகாரர் எனும் எக்ஸிக்கியூற்றராக" உரிமை வழங்கப்பெற்றவருமான

ஓதுவார் வைத்திலிங்கம் காசிப்பிள்ளை

அவர்களின் நூறாவது பிறந்த ஆண்டில், எமது தாயாரையும் நினைவு கூர்ந்து, மைந்தர்களாகிய யாம் சிரந்தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறோம்.

கா. மாணிக்கவாசகர்
நாயக வளந்தின் ஐந்தாம் உரிமைகாரர்
கா. கருணாநிதி
ஆறாம் உரிமைகாரர்

(36029)

---

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு

# சேரனின் சிறப்புக் கடை

இடம்: சிவன்கோயில் மண்டபம்
பருத்தித்துறை

காலம்: 08-04-95 சனிக்கிழமை தொடக்கம்
10-04-95 திங்கட்கிழமை வரை

நேரம்: காலை 8.30 மணிமுதல்
மாலை 6.30 மணிவரை

* எழினி புடைவை வாணிபத்தினரின் புடைவை வகைகள், தைக்கப்பட்ட ஆடைவகைகள், சேட்வகைகள்..............
* எழிற் கூடத்தினரின் பாத்திர பண்டங்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள்..............
* சேரன் எழுதுபொருள் வாணிபத்தினரின் மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், பேனைகள், பென்சில்கள்..............
* சேரன் பல்பொருள் வாணிபத்தினரின் மற்றும் பல பொருள்கள்..............

தரமான பொருள்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள இன்றே தயாராகுங்கள்,

குறிப்பு:
இச் சலுகை விலை குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே. சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!

(சி-910)

---

# முக்கிய அறிவித்தல்

சித்திரைப் புது வருடப்பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் 8, 9-04-1995 (சனி/ஞாயிறு) முழுமையாக கடைதிறந்து வியாபாரம் செய்வதற்கும். புதுவருடப் பிறப்பன்று நாள் வியாபாரத்துக்கு 3மணி நேரம் திறந்து வியாபாரம் செய்யலாம் என்பதை யாழ் மாவட்ட வணிக கழகங்களுக்கு உட்பட்ட சகல வணிக நிலையங்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

நன்றி

செயலாளர்,
யாழ். மாவட்ட வணிக கழகங்களின் இணையம்

[சி-909]

---

யாழ். மாவட்ட

அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பால்சாலை திறப்பு விழா

# அழைப்பு

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 7ஆவது பால் விற்பனைக்கிளை நிலையம் 45, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள கட்டடத்தில் எதிர்வரும் 10-04-95ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குத் திறக்கப்பட உள்ளது. அடுத்து 8ஆவது பால் விற்பனை நிலையம் ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டில் அமைந்துள்ள (கல்வியங்காட்டு சந்தியில் இருந்து திருநெல்வேலிப் பக்கம் 25 யார் தொலைவில்) கட்டடத்தில் 12-04-95ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு திறக்கப்பட உள்ளது.

இத்தருணம் சங்க அங்கத்தவர்களையும், வாடிக்கையாளர்களையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட -
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து),
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்

[சி-911)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பரிசோதகர் (தரம் I)

திரு. சேனாதிராசா இராசலிங்கம்

அவர்கள் இறையடி சேர்ந்து விட்டார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைக் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். சுங்க ஊழியர்கள்
யாழ். சுங்க நலன்புரி சங்கம்
சார்பாக பொன். பரமேஸ்வரன்.

(36087)

---

உ

விராட் விஸ்வப்பிரம்மணே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள் (10-04-1995) திங்கட்கிழமை பகல் 11 15 மணி முதல் 12-00 மணி வரையுள்ள மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| எமது சகோதரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| அமிர்தலிங்கம் | ஜெயராணி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நிகழத் திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. மு. இராசேந்திரம்
சகோதரர்கள்,
46, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
சி. செல்லத்துரை,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(இரு வீட்டார் அழைப்பு)

---

# நினைவஞ்சலி

| செல்வி | டாக்டர் | திருமதி |
|---|---|---|
| ப. இராமநாதன் | சி. வேலாயுதன் | ப. வேலாயுதன் |
| (ஓய்வுபெற்ற அதிபர், யாழ் இந்து மகளிர் கல்லூரி) | (கொழும்பு கண் வைத்தியசாலை யாழ். போதனா வைத்தியசாலை) | |
| தோற்றம்: 24 — 06 — 1926 | தோற்றம்: 04 — 10 — 1925 | தோற்றம்: 14 — 10 — 1930 |
| மறைவு: 05 — 04 — 1987 | மறைவு: 31 — 10 — 1991 | மறைவு: 16 — 06 — 1992 |

திதி: 07 - 04 - 1995

நடுத்தோட்ட விநாயகரை சிந்தையிலிருத்தி
சிறப்புடன் அதிபராக செயலாற்றிய சகோதரி
மக்கள் சேவையே மகேசன் சேவை என்று வாழ்ந்த டாக்டர்
உலகத்தையே உள்ளன்போடு நேசித்த சகோதரி
இவர்களை நெஞ்சம் மறப்பதில்லை.

— சகோதரி.

[36006]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவப்பயிற்சி முகாமாக மல்வத்தை விவசாயப்பண்ணை

கொழும்பு, ஏப். 7

அம்பாறையிலுள்ள மல்வத்தை விவசாய பண்ணை, இராணுவ பயிற்சி முகாமாக மாற்றப்பட்டுள்ளது.

போர் இடைநிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்த பின்பே இப்பயிற்சி முகாம் அமைக்கப்பட்டுள்ளது என்பது கவனிக்கத் தக்கது.

இப்பயிற்சி முகாமில், சுமார் ஆயிரம்பேர் பயிற்சி பெற்று வருவதாகவும்:

இராணுவத்தினருக்கான சகல சிறப்பு பயிற்சிகளும் இங்கு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறையில் முதலாவதாக உள்ள கொண்ட வெட்டுவான் இராணுவப் பயிற்சிமுகாமுக்கு அடுத்ததாக, மல்வத்தை பயிற்சி முகாம் உள்ளது.

புதிதாக பயிற்சி முகாம் அமைக்கப்பட்டபின் அப்பகுதி போக்குவரத்தில் பலத்த கெடுபிடிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

அம்பாறையில் அமைந்துள்ள ஏனைய இராணுவ முகாம்களில் இருந்தும், இராணுவத்தினர் இங்கு பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். [இ-5]


உ
சிவமயம்

திருநெல்வேலி – அரசடி
ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய
வருடாந்த மகோற்சவகால

## தெய்வீகப் பேருரைகள்

நிகழ்த்துபவர்:
சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம் B.A. Dip. in Ed.
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

நேரம்: இரவு 8 மணி முதல் 9 மணி வரை

| காலம் | | விடயம் |
|---|---|---|
| 06-04-95 | — | அபிராமி கடைக்கண்களே |
| 07-04-95 | — | ஞானத்தின் திருவுரு |
| 08-04-95 | — | நாமார்க்கும் குடியல்லோம் |
| 09-04-95 | — | அர்ச்சனை பாட்டேயாகும் |
| 10-04-95 | — | தணையில் பினநெஞ்சே |
| 11-04-95 | — | உள்ளம் பெரும் கோயில் |
| 12-04-95 | — | சர்வம் சக்தி மயம் |
| 13-04-95 | — | சிவகதி தானே |
| 14-04-95 | — | அளவிலாத பெருமையர் |
| 15-04-95 | — | படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே |
| 16-04-95 | — | அர்த்தமுள்ள சமயக் கிரியைகள் |
| 17-04-95 | — | ஈழத்தில் சைவத்தின் காவலர்கள் |
| 18-04-95 | — | சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் நடைபெறும். |

அன்பளிப்பு:

தருமு தேங்காய்
விற்பனை நிலையம்
திருநெல்வேலி
(36099)



## பதவி வெற்றிடம்

யாழ் மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்ளுக்கான

### தொடர்பாளர்

நிறுவனங்களுடனான தொடர்புகள் மேற்பார்வைகள் நேரடியாக சென்று மேற்கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள்:

1) அதியுயர் கல்வித்தாரதரம் விரும்பத்தக்கது.
2) ஆணாகவும், வயதெல்லை 20க்கும் 40க்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

10-04-95 ஆம் திகதி காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் கல்விச் சான்றிதழ்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன்

இல. 19, செம்மணி வீதி, நல்லூர்.
என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

பொதுச் செயலாளர்
[சி-913)



## அனித்தா பயிற்சி நிலையம்

★ Stocking Net
★ Sugar Craft ★ Facial
★ Bridal Makeup ★ Needle Work
★ Cookery ★ Cake Icing
★ Hair Style ★ Flower Making

வகுப்புக்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
புதிய டிப்ளோமா வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

PAVALAM SIVASUBRAMANIAM

பூநாறி மரத்தடி, கே. கே. எஸ். வீதி,
[36090] கொக்குவில்



## மலிவு விற்பனை

06 – 04 – 95 முதல் 15 – 04 – 95 வரை
✱ பிறசியர் வகைகள், ✱ சொக்ஸ் வகைள்,
✱ பெனியகைகள், ✱ யட்டிகள்,
✱ ஸ்கேட், ✱ பான்ரீஸ்
மற்றும்
புடைவை வகைகள் நாடுங்கள்

சிறி முருகன்
303, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-959)


## கலந்துரையாடல்

தென்மாராட்சிப் பகுதியில் தீவிரமாகப் பரவி வரும் மலேரியாக் காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியும், பிராந்திய சுகாதார தொற்றுநோயியலாளருமான டாக்டர் கே. ரி. சிவபாதம் தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெறும்.

தென்மராட்சியில் மலேரியா தீவிரமாகப் பரவி வரும் பகுதிகளைச் சேர்ந்த மருத்துவ வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவப் பிரிவினர், இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் சாவகச்சேரி பிரிவினர் இக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-15)

## சுதேசிய நாள் 2 ஆம் இரவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 7

76 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களின் தொடர்சியாக 2 ஆவது இரவு கலைநிகழ்ச்சிகள் இன்று இரவு 7 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கில் நடைபெறும்.

கிராமிய சம்பாஷணைப் போட்டி, வடமாகாண ரீதியான சரித்திர நாடகப் போட்டி, கலை நிகழ்ச்சிகளுக்கான பரிசளிப்பு ஆகியன இடம் பெறும் (இ-3)


## வாழ்த்துகின்றோம்

கடந்த இருபத்தாறு வருடங்களாக வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் கடமையாற்றி பல்துறைகளிலும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்து சிறந்த 'மாணவர்கள் பலரை உருவாக்கி இன்று (07-04-1995) சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது சிரேஷ்ட ஆசிரியை

திருமதி தங்கம்மா கிருஷ்ணசாமி

அவர்களை, நீண்டகாலம் வாழ்ந்து, பல்வகைச் செல்வங்களையும் பெற்று, தொடர்ந்தும் கல்வி உலகிற்குச் சேவை புரிய வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை

சிவகுரு வித்தியாசாலை,
வல்வெட்டித்துறை. [36096]



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## பொது நிர்வாக சபை கூட்டம்

[அவசரம்]

இடம்:- புதிய விஞ்ஞான கல்வி நிலையம்
காலம்:- 7-4-95 [வெள்ளி] பி.ப. 4 மணி

பொது நிர்வாக சபை உறுப்பினர் மாத்திரம் சமுகம் தரவும்.

பொதுச் செயலர்
யாழ். மாவட்டம்
[சி/914]



## கண்ணீர் அஞ்சலி

அன்பான ஒளி விளக்கே – விழி மூடினாய்!
உறவுகளை ஏங்கவிட்டு ஏன் ஓடினாய்!
தீயாகும் எம் நெஞ்சத் துயர் நீங்குமோ!
கண்ணீர் பொழிகின்ற விழிதான் இனி காயுமோ!

தாலாட்டு பாட்டொன்று தான் தூங்கி போனது!
பாசத்தின் சுடரொன்று ஒளி நின்று போனது!
துயராடும் நெஞ்சத்திற்கு எம் ஆறுதல்,
அன்பான தாய்க்கு எம் அஞ்சலி.

அன்னையின் பிரிவால் துயருறும் எமது நண்பன் அமல்ராஜ்க்கும், அவர் குடும்பத்தாருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்கள்.

நண்பர்கள்
(36102)


## புலிகளின் குரல் வானொலியில்

07 – 04 – 1995
வெள்ளி இரவு

★ 8-02 — கலைமஞ்சரி— அறிமுகம்: சிரித்திரன் சஞ்சிகையின் தை. மாசி, பங்குனி இதழ். 'கவிதை' சஞ்சிகையின் ஓராண்டு இதழ் சிறுகதை— சந்திரா தனபாலசிங்கம் எழுதிய "வணக்கத் துக்குரியவர்கள்" கவிதை — ஈழப்பிரியா எழுதிய மாவீரர்கள்'
★ 8-25 — கணப்பொழுது— சி. கண்ணம்மா எழுதிய "கப்டன் சிறீமதி"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம்— வே பாலகுமாரன் எழுதிய 'நச்சு வாயுக்களும் நவீன சாமியார்களும்'
★ 8-50 — ஏர்முனை— நிகழ்ச்சியில் "பாரம்பரிய இலைமரக்கறிகள்" சித்திரம்

08 — 04 – 1995
சனி காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
வெள்ளி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — கனநேரக் காவியங்கள்
★ 5-30 — மண்ணின் குரல்
★ 5-40 — நேயர் கடிதங்கள்
★ 5-45 — வெற்றிச் சுவடுகள்
★ 6-00 — சிந்தனைக்குச் சிலவிநாடிகள்
★ 6-02 — நாடகம்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 7

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய கணிதவள நிலைய திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிரேஷ்ட பிரிவுத் தலைவர் திருமதி கலைவாணி மகாதேவன் தலைமையில் நடைபெறும். (இ)

## கூட்டுறவுப் பயிற்சிக்கு இம்முறை 50 பேர் தெரிவு

யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் இவ்வாண்டுக்கான கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர் பிரிவுக்கான பயிற்சி நெறிக்கு ஐம்பது மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சிநெறிக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் 14 பேரும், வெளிவாரியாக 36 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பயிற்சி 9 மாதங்கள் நடைபெறும். [ஐ-17]

# புகழ் பூத்த கல்லூரியாக...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அடைந்தது.

1893 கல்கத்தா பல்கலைக்கழகத்தினால் இப்பாடசாலை உயர் பாடசாலையாக அங்கீகாரம் பெற்றது. இங்கே பல்கலைக்கழக புகுமுக வகுப்பு வரை போதனைகள் இடம்பெற்றன.

1895 இந்துக்கல்லூரியின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும். இதே ஆண்டில் தான் அது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி என்ற பெயரைப் பெற்றதுடன் கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஒரு கல்லூரியாக அங்கீகரிக்கப்பட்டு முதற்கலை வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

1902 இல் சட்டவாக்க சபையில் நிறைவேற்றப்பட்ட இந்துக்கல்லூரி அதிகார சபைச் சட்டத்தின் மூலம் இந்துக்கல்லூரியின் நிர்வாகம் இயக்குநர் சபையின் கீழ் கொண்டு வரப்பட்டது. சட்டவாக்க சபையில் இம்மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றியவர்களுள் கரையோரச் சிங்களப் பிரதிநிதி S C ஒபயசேகராவும் கண்டிய சிங்களப் பிரதிநிதி S.N.W கஜகலானவும் பெரும் பங்கு வகித்தனர்.

இந்துக்கல்லூரியின் வரலாற்றிலே 1933ஆம் ஆண்டு சிறப்பைப் பெறுகின்றது. இந்த ஆண்டில் தான் முதற்தடவையாகக் கல்லூரியின் பழைய மாணவரான திரு. ஏ. குமாரசுவாமி M. A. அவர்கள் அதிபர் பதவியை பெற்றார். கல்லூரியின் நூற்றாண்டு கால வரலாற்றில் நெவின்ஸ் செல்வதுரை அவர்கள் மூன்று தசாப்தங்களிற்கு மேலாக அதிபர் பதவி வகித்து அளப்பரிய சேவையாற்றியதைப் போலவே அவருக்கு அடுத்தபடியாக இரண்டு தசாப்தங்கள் அதிபர் பதவியை அலங்கரித்துக் கல்லூரியைப் பல வழிகளிலும் சிறப்படையச் செய்தவராகத் திரு. ஏ குமாரசுவாமி அவர்கள் விளங்கினார்.

திரு. குமாரசுவாமி அவர்களின் மறைவைத் தொடர்ந்து திரு. V. M. ஆசைப்பிள்ளை அவர்கள் அதிபர் பதவியைப் பெற்றார். அவரது காலமும் பல சிறப்புகளைக் கல்லூரி அடைந்த காலப்பகுதியாக அமைகின்றது. இவர் காலத்தில் கல்லூரியின் தாபகர் இ. நாகலிங்கத்தினதும், இணைத்தாபகர் இத. மு. பசுபதிச் செட்டியாரினதும் நூற்றாண்டு தின விழாக்கள் கொண்டாடப்பட்டன. கட்டட வளர்ச்சியும், கல்வித்துறை வளர்ச்சியும் ஏற்பட்டன. 1960 டிசம்பரில் அதுவரை இந்துக்கல்லூரி அதிகாரி சபையினால் நடத்தப்பட்டு வந்த இந்துக்கல்லூரியின் நிர்வாகம் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பில் கொண்டு வரப்பட்டது.

கல்லூரியின் வரலாற்றில் அதிபர் ப. சபாரத்தினம் அவர்கள் காலத்தில் 75ஆவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. கல்வித்துறையிலும், விளையாட்டுத் துறையிலும், அதிபர் ந. சபாரத்தினத்தின் காலம் சிறப்புமிக்க சாதனைகளை ஈட்டிய காலமாகத் திகழ்ந்தது.

திரு. P. S. குமாரசுவாமியின் காலத்தில் இந்துக் கல்லூரி மேலும் பல சாதனைகளை கண்டது.

அவரது பத்து வருட கால நிர்வாகத்தில் அகில இலங்கையிலும் மாவட்ட ரீதியிலும் விளையாட்டுத் துறையில் பல சாதனைகள் படைக்கப்பட்டன.

புதிய அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் 1984 இல் பதவியேற்றார். அவர் பதவியேற்ற காலம் தமிழர் பிரச்சினையும், மாணவர் அமைதியின்மையும் தீவிரமடைந்த காலப் பகுதியாகும். இருந்தபோதும் கட்டடத் துறையில் விஞ்ஞான மண்டபம் முழுமை பெறறது. இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய 1987 இல் இந்துக் கல்லூரி அகதி முகாமாக இருபது நாட்கள் வரை மாறியிருந்தது. 1989 இல் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முழு முயற்சியுடன் கல்லூரியில் வீற்றிருக்கும் சிவஞானவைரவப் பெருமானுக்கு கும்பாபிஷேகமும், குடமுழுக்கு விழாவும் நடத்தப்பட்டன. திரு. பொன்னம்பலம் அவர்கள் இடமாற்றம் பெறறுச்செல்லவே 1990 இல் கே. எஸ். குகதாசன் அவர்கள் அதிபரானார். 1991 ஜனவரியில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

புதிய அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களின் காலப் பகுதி பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து நடக்க வேண்டியதாக உள்ளது. கல்லூரியைச் சிறப்புற நடத்துவதற்குப் பழைய மாணவர் சங்கம், பெற்றோர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன் விரும்பிகள் உதவி பெருமளவு வேண்டப்பட்ட காலமாகவும், தேசியக் கல்லூரி என்ற வகையில் அரசின் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படாதும் காணப்பட்டது. பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் உதவி கொண்டு தற்போதைய அதிபர் கல்லூரியைப் பல துறைகளிலும் அபிவிருத்தி அடையச் செய்துள்ளார். மிகச் சிறப்பான பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்ந்தும் ஈட்டப்பட்டு வருகின்றன மாணவர், பெற்றோர், ஆசிரியர் உறவில் விசேட கவனம் செலுத்தப் பட்டுவருகின்றது கல்லூரியில் நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனைத் திறம்படக் கல்லூரியில் செயற்படவைத்தவராக அதிபர் விளங்குகின்றார்.

தமிழீழ சுதந்திரப்போராட்டம் முளைவிட்ட காலத்தில் இருந்து யாழ் இந்துவின் மாணவமணிகள் தங்களையும் இப்போராட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவில் இணைத்துக்கொண்டனர்;

இலங்கையில் புகழ் பூத்த கல்லூரிகளுள் ஒன்றாக தொடர்ந்து இந்துக் கல்லூரி சாதனைகளைப் படைத்த வண்ணம் இருக்கின்றது 1994 இல் வெளிவந்த க. பொ. த பசதாரணம், உயர்தரம், தமிழீழ இளநிலை, முதுநிலைத் தேர்வுகளில் மிகச் சிறந்தசாதனைகளை அது படைத்துள்ளது. விளையாட்டுத்துறையிலும் புறப்பாடவிதானத் துறையிலும் அதன் சாதனைகளுக்குக் குறைவில்லை. பழைய மாணவர் பெற்றோர் நலன்விரும்பிகள் கல்லூரியில் மேல் கொண்டுள்ள பற்று அதன் வளர்ச்சியை மேலும் முன்னெடுத்துச்செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்

## இங்கிலாந்தில் இருந்து...

உடலால் நீண்ட தூரம் பிரிந்துள்ள போதும் என்றும் எமது அன்பிற்கும் மரியாதைக்குமுரிய யாழ். இந்து அன்னையின் நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டிற்கு ஆசி வழங்கக் கிடைத்த வாய்ப்பு என் பெரும் பேறே!

மலர்க் குழுவினர்க்கு எனது வாழ்த்துக்கள்

வைத்தியக் கலாநிதி. எஸ். ஜோதிலிங்கம்,
தலைவர்
ஐக்கிய ராச்சிய கிளை
ப. மா. சங்கம்

## விக்டோரியாவில் இருந்து..

எம்மையும், எம்மைப் போன்ற பல இலட்சம் பேரையும் உய்வித்த எம் அன்னை யாழ் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாச் சிறப்புமலர் வெளியீட்டிற்கு எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

து. ஸ்கந்தகுமார்,
ப. மா. ச. தலைவர்,
அவுஸ்திரேலிய [விக்டோரியா] கிளை

## கனடாவில் இருந்து...

அன்னையின் நிழலில் வாழ்ந்து அவனியில் எங்கும் சிறக்கும் அனைத்து முன்னாள் மாணவர்களும் முதுகு நிமிர்த்திப் பேசும் நிகழ்ச்சியிது.

எமது இந்தக் "கலை பயில் கழகம்" காலகாலமாய் புகழோங்கி நிலைத்திட எமது வாழ்த்துக்கள். சாதனைகளை ஆவணமாக்கும் மலர்க்குழுவிற்கு எமது நன்றிகள்.

க. கனகராசா
ப. மா. ச. தலைவர் கனடா கிளை

## மூத்த பழைய மாணவர் ஆசி

எமது பிரதேசத்தில் காணப்படும் அசாதாரண சூழ்நிலைகளின் மத்தியிலும் இந்நூலினை வெளிக் கொணர்வதில் பழைய மாணவர் சங்கம் உட்பட்ட கல்லூரி சமூகத்தவர்க்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இக் கல்லூரி பல நூற்றாண்டுகளைக் கடந்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு சிறந்த சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

என்.ஏ.வைத்திலிங்கம்
மூத்த பழைய மாணவர்
இளைப்பாறிய
பொறியியலாளர்

## 'காலத்தாற் செய்த 'உதவி'

அன்னையின் நூற்றாண்டு காலச் சாதனைகளிலே எழுதக்கூடிய சாதனைகளைத் தன்னகத்தே கொண்டு, ஒரு வரலாற்றுப் பதிவாக இந்த "நூற்றாண்டு மலர்" மலர்ந்துள்ளது. இதை மலர்வித்தவர்கள் அனைவரதும் பாராட்டுதல்களுக்கும், கல்லூரிச் சமூகத்தவரின் நன்றிகளுக்கும் உரியவர்கள். அவர்கள் காலத்தாற் செய்த உதவி இனி ஞாலத்தாற் போற்றப்படும்.

ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட மாணவ முதல்வன்
தலைவர், மாணவ முதல்வர் சபை

## பாடசாலை ஓர் ஆலயம்

யாழ். இந்துக்கல்லூரி நூற்றாண்டு மலருக்கு வாழ்த்தினை கூறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பாடசாலை என்பது ஒரு ஆலயமாக இருக்க வேண்டும் எமது ஆலயம் ஆயிரமாயிரம் இளம் நெஞ்சங்களில் அறிவெனும் ஒளியினை ஏற்றி இந்த மண்ணில் மனிதம் வளர உதவி வந்துள்ளது. இப்பணி பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டுகளுக்குத் தொடர இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

தி. தியாகராசா
உடற்கல்விப் பணிப்பாளர்
யாழ். பல்கலைக்கழகம்

## வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தாயாகிய சைவ பரிபாலன சபை தனது பிள்ளையாகிய இந்துக் கல்லூரி கல்வி உலகில் வரலாறு படைத்து முதன்மை பெற்று வருவது கண்டு மகிழ்ச்சி அடைகின்றது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிய அதிகார சபை முகாமையாளர்கள் எல்லோரும் எமது சபையின் முதன்மை உறுப்பினர்கள்.

கல்லூரியின் நூற்றாண்டு மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

இ. மகேந்திரன்,
தலைவர்,
சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு மலர் வெளியீட்டுச் சிறப்பிதழ்

07-04-1995

## ஆதீன முதல்வரின் ஆசி

யாழ். இந்துக் கல்லூரிச் சமூகம் நூற்றாண்டு மலர் எடுக்கவிருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். தாம் கல்வி பயின்ற கலாசாலையையும், பெற்ற அன்னையையும் மறவாதிருப்பது போற்றற்குரியது. இன்னல்களும், இடர்களும் நிறைந்த இக் காலகட்டத்திலும் மன உறுதியோடும் ஒற்றுமையோடும் செயற்படுவது பாராட்டுக்குரியது. கற்க வேண்டியவைகளை குறையின்றிக் கற்றாய்ந்து நன்நெறிகளைக் கடைப்பிடித்தொழுகுவதுதான் பெரிய குணம். அவ் வகையில் இம் மாணவ மணிகள் செயலாற்றுகிறார்கள். இது வெறும் புகழ்ச்சியல்ல. பெற்றோர்களினதும், ஆசிரியப் பெருமக்களின் உறுதுணையும் இவர்களுக்குண்டு. எனவே விழா ஒரு குறையுமின்றிச் செவ்வனே நிறைவுற எல்லா வகையாலும் பணிகள் புரியும் அன்பர்களை மனமார வாழ்த்துகிறோம். எல்லோருக்கும் பரம்பொருளின் திருவருளை உணரவேண்டி எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ பரமாசார்ய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## வாழ்க யாழ். இந்துக்கல்லூரி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தமிழர்களினதும் சைவ சமயத்தினதும் பாரம்பரியத்தைக் காத்து வளர்த்து வரும் பாரிய தாபனமென்றால் மிகையாகாது.

நூற்றாண்டு தாண்டிய நிலையில் பீடுநடை போடும் யாழ். இந்துக் கல்லூரியின் சமூகமானது அதன் வரலாற்றுச் சான்றாக நூற்றாண்டு மலரொன்றை வெளியிடுவது அறிந்து மிக மகிழ்வடைகின்றேன்.

எமது சமயகுரவரான ஆறுமுகநாவலர் வழியில் நின்ற பெரியார்களினால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்துக்கும் செய்துவரும் சேவை அளப்பரியது.

இவற்றை நினைவுகூரும் வகையில் நூற்றாண்டு மலரொன்று வெளியிடுவதையிட்டு, இக்கல்லூரியின் பழைய மாணவரையும், பெற்றோர், நலன் விரும்பிகளையும் பாராட்டுவதோடு, இக்கல்லூரியானது பல நூற்றாண்டுகள் வளர்ந்து நாட்டுக்கும், மொழிக்கும், சமயத்துக்கும் சேவை செய்ய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க யாழ். இந்துக்கல்லூரி வளர்க அதன் பணி.

க. பொன்னம்பலம்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

## வரலாற்றுச் சாதனை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கமும் கல்லூரிச் சமூகமும் கல்லூரி நூற்றாண்டு மலர் ஒன்றினை வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி.

1890 இல் எம்மண்ணில் சைவச்சிறார்கள் எமது சமயம், பண்பாடுகள் பற்றி உணர்வுடன் ஆங்கிலக்கல்வி பெறும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விக்கழகம் பலவித இடையூறுகளிடையே எதிர்நீச்சல் போட்டு, தனது இலட்சியம், பாரம்பரியம் என்பவற்றைப் பாதுகாத்து முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாக நூற்றாண்டு காலம் சேவையாற்றியுள்ளது. இது ஒரு வரலாற்றுச் சாதனை.

இக்கல்லூரியில் 40 ஆண்டுகள் வரை மாணவனாக, ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக இருந்ததை ஒரு பெரும் பேறாக கருத இடமுண்டு.

எமது கல்லூரி நீடூழி காலம் சேவையாற்றி நற்பிரஜைகளை உருவாக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து வெளியிடப்படும் நூற்றாண்டு மலர் சிறப்பாக அமைய நல்லாசிகளையும் தெரிவிக்கிறேன்.

ச. பொன்னம்பலம்
முன்னாள் அதிபர்,
பருத்தித்துறை

## இணைப்பாளரின் வாழ்த்து

நூற்றாண்டைக் கடந்து வீறுநடைபோட்டு தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளப்பரிய சேவையினை நல்கிவரும் யாழ் இந்துக்கல்லூரி அன்னை தனக்கு நூற்றாண்டு மலர் ஒன்றினை வெளியிடுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சிக் கடலில் திளைக்கின்றாள். இம்மலரினை இந்துக்கல்லூரிச் சமூகம் வெளியிடுவது காலத்தின் தேவையாகும். இந்நூற்றாண்டு மலர் வெளியீட்டுக் குழு சிறந்த இணைப்பாளராகவிருந்து அதனை வெளியிடுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

நூற்றாண்டு மலர் வெளியீடு சிறப்புற எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி. கா. குகபாலன்

## சுதந்திர உணர்வின் குறியீடு

தேசிய சுதந்திர உணர்வின் குறியீடான எம் அன்னையைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது இந்துவின் சமூகத் தவராது பணியாகும். அன்னையின நூற்றாண்டு வரலாற்றை ஆவணப்படுத்த முயன்றுள்ளோரை வாழ்த்துகின்றேன் அனைவரும் அன்னையின் சேவையில் திருப்தியடைவோமாக.

சுந்தரம் டிவகலாலா
மாகாண சபை,
திருமலை

## முயற்சிக்கு வாழ்த்து

கல்லூரி தனது நூற்றாண்டு காலத்தில் சாதித்தவை, அதன் வரலாறு என்பனவற்றை நிரந்தரமாக ஆவணப்படுத்தும் வகையில் நூற்றாண்டு விழா மலரொன்றை வெளியிடும்திட்டமும்இருந்தது ஆனால்நாட்டின்நிலைமைகளினால் முன்னர் அது நிறைவேறவில்லை.

தற்போது பழைய மாணவர் சங்கமும், கல்லூரியும் இணைந்து நூற்றாண்டு மலரை நெருக்கடிகள் நீங்காத சூழலிலும் வெளிக்கொணர்கிறது. அதன் எல்லா முயற்சிகளும் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்
முன்னாள் தலைவர்,
பழைய மாணவர் சங்கம்.

## ஆசிரிய கழகம் ஆசி

இன்று கல்லூரியை அலங்கரிக்கும் ஆசிரிய மாணவர்கள் பழைய மாணவர்கள் இதன் சென்றநூற்றாண்டுச் சிறப்பையுணர்ந்து அடுத்த நூற்றாண்டில் நல்லதோர் தேசிய மனிதனை உருவாக்கும் பட்டறையாக இந்துவை உயர்த்துவர் எனும் நம்பிக்கையுடன் எமது கைகளை அவர்களுடன் இணைத்துக்கொள்கிறோம்.

எஸ். கிருஷ்ணகுமார்
தலைவர்
ஆசிரிய கழகம்

## புகழ் பூத்த கல்லூரியாக தொடர்ந்து சாதனைகள் படைக்கும் யாழ். இந்து

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஆரம்பம் 1887இல் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் திரு. வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளையினால் ஆரம்பிக்கப்பட்ட சுதேசிய உயர் பாடசாலை என்பதுடன் தொடர்புடையதாக உள்ளது.

இப்பாடசாலை 1889 இல் நிதிப்பற்றாக் குறையின் விளைவாக அட்வகேட் நாகலிங்கம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தேசிய உணர்வும், கொடையுள்ளமும் கொண்ட இவரின் பெயரில் நாகலிங்கம் பட்டணபாடசாலை என்று அழைக்கப்பட்டது.

1890இல் இப்பாடசாலை சைவ பரிபாலன சபையின் மேற்பார்வையில் கொண்டுவரப்பட்டு வண்ணை சிவன் கோவில் வடக்கு வீதியிலுள்ள ஒரு கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. அப்போது இந்து உயர் பாடசாலை என்று அழைக்கப்பட்டது.

சைவ பரிபாலன சபை இதனை மேற்பார்வை செய்யவென ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட உபகுழுவை அமைத்தது. இந்த உபகுழு திரு. சி. நாகலிங்கம் அவர்களைப் பாடசாலையின் முகாமையாளராக நியமித்தது. இப்பதவியை அவர் 4-8-1897 இல் திடீர் மரணம் ஏற்படும்வரை வகித்தார்.

இந்துக் கல்லூரியின் பழைய பிரார்த்தனை மண்டபத்தில் திரைச்சீலை தொங்கும் மரப்பலகையின் மேற்பரப்பில் The Founder and Manager of the Institution" எனத் திரு. நாகலிங்கம் குறிப்பிடப்பட்டுள்ளார்.

சட்டசபை அங்கத்தவரான திரு பொ.இராமநாதன் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பதற்காகப் போடப்பட்ட பந்தலில் விகிர்த்தி வருடம் விஜயதசமி (23 10-1890) அன்று முறைப்படி சைவபரிபாலன சபையினால் இந்து உயர் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது சப்பல் வீதியில் இருந்த வண Kock பாடசாலை அதன் தாபகர் கொழும்பு சென்றதனைத் தொடர்ந்து இயங்காத நிலையில் அங்கு கற்ற மாணவர்களும் இங்கு சேர்ந்து கொண்டனர் இந்து உயர் பாடசாலை அமைக்கப்பட்ட காணியைக் கொள்வனவு செய்வதில் சைவபரிபாலன சபையின் பொருளாளரான இத. மு. பசுபதிச்செட்டியார் முக்கிய பங்கினை வகித்தார்.

இந்து உயர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது அதன் தலைமை ஆசிரியராக இருந்தவர் திரு. எஸ். அப்பாபிள்ளை ஆவார். இந்துக் கல்லூரியின் பிரதான கட்டடம் (காங்கேசன் வீதியருகில்) 04-05-1891 இல் அத்திவாரமிடப்பட்டு 1895 இல் முதலியார் பொ. குமாரசுவாமி அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டடம் சிறப்பாக அமைந்தமைக்கு பிரதி இத. மு. பசுபதிச் செட்டியார் அவர்களின் தன்னலமற்ற பணி காரணமாகும்.

திரு. நெவின்ஸ் செல்வதுரை அவர்கள் பெப்ரவரி 18 ஆம் திகதி இப்பாடசாலையின் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். அவரது நீண்டகால தன்னலமற்ற சேவையினால் யாழ்ப்பாணத்தில் சிறப்புப் பெற்ற கல்வி நிறுவனமாக அது வளர்ச்சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

ச. சத்தியசீலன் M A.
சிரேஷ்ட விரிவுரையாளர் I வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(மலராசிரியர்)




### மலராக்கக் குழு

| | |
|---|---|
| தலைவர்: | திரு. அ. பஞ்சலிங்கம் |
| உபதலைவர்: | திரு. க. பரமேஸ்வரன் |
| இணைப்பாளர்: | கலாநிதி கா குகபாலன் |
| மலராசிரியர்: | திரு. ச. சத்தியசீலன் |
| உறுப்பினர்: | திரு. எஸ் சிவராசா |
| | திரு. ரி. ரி. அருளானந்தம் |
| | திரு. ந. வித்தியாதரன் |

P. கந்தசாமி
ஏசியா அங்காடி
124, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அகிலன் பாதணியகம் (BATA SHOP)
121/T, கிராண்ட்பசார்
யாழ்ப்பாணம்.

யாழ். வணிகர் நிலையம்
108, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குகன் களஞ்சியம்
180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

P. செந்திலநாதன்
V. J. S.
176, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

P தவராஜா
இந்திரா இரும்புக் களஞ்சியம்
131, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் பொத்தகசாலை
யாழ்ப்பாணம்.

ரவி மோட்டோர்ஸ்
245, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

"கலியுகவரதன்"
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அதிபரின் வாழ்த்து செய்தி

நூற்றாண்டுக்கு மேலாக எமது சமூகத்திற்குத் தொண்டாற்றி இந்து அன்னையின் வளர்ச்சிப் பாதையின் அடிச்சுவடுகளை மீள ஒருமுறை பார்ப்பதற்கு இந் நூற்றாண்டு மலர் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இம் மலர் கல்லூரியின் ஒரு வரலாற்று ஆவணப் பதிவேடாக உருவாவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். எனது சேவைக் காலத்தில் இம் மலர் வெளிவருவது எனக்குக் கிடைத்த ஒரு பேறாகக் கருதுகின்றேன். எம் அன்னை தொடர்ந்தும் பல நூற்றாண்டுகள் வெற்றிப் பாதையில் செல்ல எனது நல்லாசிகள்.

அ. பஞ்சலிங்கம்,
அதிபர்.

## சங்க தலைவரின் வாழ்த்து

எமது பெருமை மிகு கல்வித்தாபனமாகிய யாழ். இந்துக் கல்லூரி நூறாவது ஆண்டினைப் பூர்த்திசெய்து தொடர்ந்தும் வீறுநடைபோடுவதையிட்டு பழைய மாணவர்களாகிய நாம் பெருமைப்படாமல் இருக்கமுடியாது.

இக்கல்லூரித்தாயின் மடியில் 10ஆண்டுகள் தவழ்ந்து நன்னிலையடைந்த நான் எனக்கு அறிவூட்டிய ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரைச் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு, கலை, கலாசாரம், சமூகப்பணி போன்ற பலதுறைகளிலும் ஈழத்தில் சிறந்த பாடசாலையாக யாழ். இந்து விளங்குகிறது

இம்மலர் வெளிவருவதற்கு பழைய மாணவர் சங்கம் முழுமுதற் காரணமாக அமைகின்றது என்று கூறிக்கொள்வதில பேருவகை அடைகின்றேன் இவ்வெளியீட்டுவிழா சிறக்க மலர்க்குழுவினரைப் பழைய மாணவர் சார்பில் வாழ்த்துகின்றேன்.

க. பரமேஸ்வரன்
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்.

## முன்னாள் தலைவர் ஆசி

யாழ். இந்துவின் நூற்றாண்டையொட்டி வெளிவரும் இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வெய்துகிறேன்.

இலங்கைத் தமிழரின் முன்னணிப் பாடசாலையான இக்கல்லூரியில் பயின்றவர்கள் நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் பல்முனைகளில் முன்னிலை வகிக்கின்றனர். எமது பிரதேச கணித பாரம்பரியத்தை முன்னெடுத்து, ஒப்பீட்டு ரீதியில் பெருமளவு பொறியியலாளர்களைத் தந்த இக்கல்லூரியின் செயற்பாட்டில் எமது பிரதேச வாழ்வும், வளமும் தங்கியுள்ளதெனலாம்.

இன்று வெளியிடப்படும் நூற்றாண்டு மலர் கல்லூரிச் சமூகத்தினரால் ஓர் ஆவணமாக வைத்திருக்க வேண்டும். இம்மலரை வெளியிடும் மலர்க்குழுவினருக்கு எனது வாழ்த்துக்கள்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப்பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்.

## எமது காணிக்கை

'அன்னை மனம் மலர மலரும் நூற்றாண்டு மலர்'

மாதா பிதா, குரு, தெய்வம் என்ற தமிழன் வழிமுறையில் மதிக்கும் தமிழராகிய நாம் நூறு ஆண்டுகளைக் கடந்து விட்ட அன்னை யாழ். இந்துவை பெருமையுடன் மதித்து விழாவெடுத்து மகிழ்ந்த நாம், நிலவிய அமைதியின்மை தந்த காலதாமதத்தைக் கடந்து தற்போது நூற்றாண்டு மலரினை வெளியிடுகிறோம்.

அன்னை எதையும் எம்மிடம் எதிர்பார்ப்பதில்லை. எனினும் எமது காணிக்கையை செலுத்துவதில் திருப்திகாண்போம்.

க. சி. குகதாசன்,
முன்னாள் அதிபர்.

## அபிவிருத்திச் சங்கம் ஆசி

யாழ்ப்பாணம், இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா சிறப்புற இந்துக்கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

ச. சத்தியசீலன்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## கொழும்பு கிளை வாழ்த்து

நாட்டின் புகழ்பூத்த கல்வி நிலையங்களில் ஒன்றான யாழ். இந்துக்கல்லூரி நூற்றாண்டு கண்டும் என்றும் இளமையுடன் வீறுநடைபோடுகின்றது. நாவலரின் வழிவந்த நாகலிங்கம் பசுபதிச் செட்டியார், காசிப்பிள்ளை போன்றோர் முயற்சியால் நாவலர் கனவின் நனவாய் யாழ். இந்து பிறந்தாள்.

'கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' எனும் கல்லூரியின் தாரகமந்திரத்துடன் கல்லூரி பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இன்று வெளியிடப்படும் நூற்றாண்டு மலர் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

செ. குணரத்தினம்
ப மா. ச,
கொழும்பு கிளைத் தலைவர்.

## இயக்குநர் சபையின் ஆசி

காலம் கடந்தபோதும் தம் நன்றிக்கடன் முறையாக செய்ய விரும்பி கல்லூரியின் நூற்றாண்டுச் சாதனைகளை சொல்லில் வடித்து ஒரு மலரை வெளியிட்டு பழைய மாணவர்கள் இன்று தம் அன்னைக்கு சமர்ப்பிக்கிறார்கள்.

இன்றைய மலர் வெளியீட்டு விழா சிறப்பாக அமைய வாழ்த்தி இறை ஆசியையும் வேண்டுகின்றேன்.

வைத்திய கலாநிதி வே. யோகநாதன்
—செயலாளர்—
இந்துக்கல்லூரியும், அதனுடன் இணைந்த கல்லூரிகளின் இயக்குநர் சபை

## சிட்னி கிளை வாழ்த்து...

கல்லூரியின் நூற்றாண்டு கால வரலாற்றை — சாதனைகளை, வளர்ச்சியை, ஆவணப்படுத்தும் வகையில் மலர் சிறப்புற சிட்னிக் கிளையின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

க. சண்முகசோதி,
ப. மா. ச. தலைவர்,
அவுஸ்திரேலிய (சிட்னி) கிளை

உதயன்
202/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சந்தேகம் வேண்டும்

இப்போதுள்ள ஓய்வைப் பயன்படுத்தி இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளதாகவும், அதனால் எந்த வேளையிலும், செயற்படக் கூடிய உஷார் நிலையில் அவர்கள் கிழக்கில் தயார் நிலையில் இருப்பதாகவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ''புரண்ட்லைன்'' இதழுக்குத் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கில் மட்டுமென்ன, வடக்கிலும் எந்த நிமிடத்திலும் போர்க்களத்தில் குதிப்பதற்கு இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்ற அர்த்தப்பட அவர் கூறியிருக்கிறார்!

சாமாதானப் பேச்சுவார்த்தை தோல்வி கண்டால், முறிந்து போனால் மீண்டும் போரை நடத்தி இராணுவத் தீர்வு காண்பது என்பதே பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் நிலைப்பாடு. இது அவரது தனிப்பட்ட நிலை என்று கூறப்பட்டாலும், அனேகமாக அரசாங்கத்தின் நோக்கமும் இதுவே.

சமாதானப் பேச்சுக்கள் தோல்வி அடையும் பட்சத்தில், இராணுவம் போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பணிபுரியும் இராணுவத்தினர் மத்தியில் கடந்த மார்ச்முற்பகுதியில் பேசுகையில் அறைகூவல் விடுத்தவர் இதே பிரதி அமைச்சர்தான்!

அமைச்சரின் இந்தப் பாதகமான, பாரதூரமான கருத்தை மனதில் வைத்திருந்த பி. பி. ஸி. செய்தியாளர், மார்ச் நடுப்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா லண்டனுக்கு விஜயம் செய்த போது அவரிடம் பிரஸ்தாபித்தார்.

பிரதி அமைச்சர் ரத்வத்த அவ்வாறு கூறவில்லை என்றும், அவரது கருத்துப் பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டு விட்டது என்றும் கூறி, ஜனாதிபதி சந்திரிகா நழுவிக் கொண்டார்!

ஜனாதிபதி அவ்வாறு மறுத்த பின்னரும், பிரதி அமைச்சர் ரத்வத்த, இராணுவத்தினர் போருக்குத் தயார் நிலையில் இருக்கிறார்கள் என்பதனை மிகப் பூடகமாக கூறியிருக்கிறார்.

அது மட்டுமல்ல, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததைத் தக்கபடி பயன்படுத்தி இராணுவத்தினருக்கு நல்ல பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம், பேச்சுவார்த்தை என்பன, புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டவை என்று வியாக்கியானம் செய்தவர்கள் இப்போது என்ன சொல்லப்போகிறார்கள்?

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும், கடற்படைக்கும் புலிகள் கையால் பெரும் தோல்விகள் கிடைத்தன. அந்த தோல்விகளால் இராணுவத்தினரின் போரிடும் மனஉறுதி அற்றுப்போய் இருந்தது. ஆகையால் அவர்களுக்கு ஓய்வு தேவைப்பட்டது. அந்த ஓய்வின் போது கூடுதல் பயிற்சி பெற்று பலமடையத் திட்டமிட்டார்கள். படையினரின் மன உறுதியை வளர்க்க நினைத்தார்கள். மூன்று மாத காலத்தில் இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றிவிட்டார்கள், இப்போது, எவ்வேளையும் போருக்குத் தயார் என்று மார்பு தட்டுகிறார்கள்.

இத்தனையும் செய்துவிட்டு அவற்றைச் சொல்லியும் விட்டு, பூநகரி இராணுவ முகாமைத் தொடுதளமாகப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தப்படும் என்று விடுதலைப் புலிகள் நினைத்தால் அது ஆக்கபூர்வமற்றது என்று கூறுகிறார் அனுருத்த!

சமாதானத்தைக் காண்பதற்கு இருசாராரும் சந்தேகங்கள் இன்றி உழைக்க வேண்டும் என்று கூறிச் சமாளிக்கும் அனுருத்த, விடுதலைப் புலிகளை சந்தேகிக்காமலா இருக்கிறார்? அப்படியாயின் படைகளுக்குப் பயிற்சியும், போர்த் தயார் நிலையும் ஏன்?

விடுதலைப் புலிகள் அரசின் ஒவ்வொரு செயற்பாட்டையும் சென்ரிமீற்றருக்கு, சென்ரிமீற்றர், நகர்வுக்கு நகர்வு சந்தேகத்துடன் பார்த்தே செயற்பட வேண்டும். அது தவிர்க்க முடியாத தேவை.

# யாழ். ஆஸ்பத்திரிகளின் தேவைகள்
# புனர் வாழ்வு அமைச்சு கோருகிறது

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ். மாவட்டத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் கீழ் இயங்கும் ஆஸ்பத்திகளுக்குத் தேவையான வாகனங்கள் நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் மின் இயந்திரங்கள் போன்றனவற்றின் விவரங்களை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு கோரியுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் ஆலோசகர் டாக்டர் எஸ். குணசிங்கம் கடந்த செவ்வாயன்று யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொண்டு மேற்படி விவரங்களைக் கோரினார்.

அதனை அடுத்து ஆஸ்பத்திரிகளின் தேவைகள் குறித்த விவரமான அறிக்கை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரியினால்கொழும்புக்குஅனுப்பி வைக்கப்பட்டது.

நான்கு அம்புலன்ஸ்கள், ஐந்து ஜீப் வண்டிகள், லொறி, மினிவான் ஆகிய வாகனங்கள் ஆஸ்பத்திரிகளின் பாவனைக்குத் தேவையென அந்த விவரப்பட்டியலில் கோரப்பட்டுள்ளது.

மார்பு நோய் சிகிச்சைப் பிரிவுக்கு, காசநோய் கண்டுபிடிப்பதற்கான ''மாஸ்மனி'' எக்ஸ்றே கருவி, மனநோயாளர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதற்கான மின் இயந்திரம், தொற்று நீக்கும் கருவிகள் உட்பட பல உபகரணங்கள் அந்ததேவைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. [ஐ-15]

# ஆஸ்பத்திரி மூளை மின்னலை பிரிவை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை

யாழ். போதனாவைத்தியசாலையில் உள்ள மூளை மின்னலை பதிவுப் பிரிவை மீண்டும் இயக்க வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

இப் பிரிவை இயக்க வைப்பதற்கான தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்கள் இல்லாததால் யாழ். போதனா வைத்தியசாலையில் சுமார் நான்கு வருடங்களாக இப்பிரிவு இயங்காமல் முடங்கிக் கிடக்கின்றது.

இதனை மீண்டும் இயக்குவதற்கு தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்களைத் தந்து உதவுமாறு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர். செல்வி. நவமலர் கனகரட்ணம் சுகாதார அமைச்சை கேட்டுள்ளார்.

இதனை அடுத்து கொழும்பில் இருந்து மூளை மின்னலை தொழில் நுட்பவியலாளர்கள் விரைவில் யாழ்ப்பாணம் வருவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது மூளை மின்னலைப் பதிவுப்பிரிவு கொழும்பு, முல்லேரியா, பொரளை சிறுவர் வைத்தியசாலை, றாகம, கண்டி, காலி ஆகிய வைத்தியசாலைகளில் மட்டுமே உள்ளது.

மூளையில் ஏற்படும் சில குறிப்பிட்ட நோய்களை விரைவாக கண்டுபிடிப்பதற்கு இப்பிரிவு மிகவும் அவசியமானது என்பது குறிப்பிடத் தக்கது. [ஐ-17]

பயிற்சிக் கலாசாலையில்

# தொலைக் கல்வி பயிலுநர் ஆசிரியரை சேர்க்க முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 7

தொலைக்கல்வி பயிலுநர் ஆசிரியர்கள் இரண்டாயிரம் பேரை எதிர் வரும் ஒரு வருடகாலத்துக்குள் ஆசிரிய பயிற்சி கலா சாலைகளில் சேர்த்துக் கொள்வதென கல்வி, உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மூடப்படும் நிலைக்கு சென்று கொண்டிருக்கும் ஆசிரிய பயிற்சி கலாசாலைகளை பழைய நிலைக்கு கொண்டு வருதல் தொடர்பாக கடந்த மாதம் 29ஆம் திகதி இசுறுபாய கல்வி உயர்கல்வி அமைச்சில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இத்தகவலை அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்தார்.

புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையாலும்—

பயிலுநர் ஆசிரியர்கள் தொலைக்கல்வி பயிற்சிக்கு செல்வதனாலும் — மேற்படி கலாசாலைகளில் புதிய ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப்படாமல் உள்ளனர் என்பது பற்றி பயிற்சி கலாசாலை அதிபர்கள் அமைச்சரிடம் எடுத்துக் கூறியிருந்தனர்.

இதனை அடுத்தே, இதற்கான அறிவித்தலை வர்த்தமானி மூலம் விடுத்து இரண்டு வார காலத்துள் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பணித்துள்ளார். (இ-14-4)

## உலக சுகாதார தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 7

உலக சுகாதார தினம் நாளை ஆகும்.

இதனை ஒட்டி யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளன.

நிகழ்ச்சிகள் யாவும் சமகால சுகாதாரப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருக்கும்.

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

''உலக சுகாதார தினமும், நோக்கங்களும்'' என்ற தலைப்பில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் அதில் உரையாற்றுவார். (ஐ)

## இன்றைய இசை அரங்கு

யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம் நடத்தும் ஸ்ரீ காமாட்சி இசை அரங்கு நிகழ்வில் இன்று வெள்ளிக் கிழமை செல்விகள் செ. காஞ்சனா, க. கீர்வாணி, த. வாசுகி, த. துஷ்யந்தி, த. கிரிசாந்தி பொ. சர்மினி, இ. கௌரி மனோகரி ஆகியோரின் வயலினிசையும் —

செல்விகள் வ. அருந்ததி இ. ஆனித்தா, இ. அலோஜிதா ஆகியோரின் பாட்டும் இடம்பெறும். (ஐ-14)

* * *

★ நல்லூர் மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு ஆலய தர்மகர்த்தாசபையும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றமும் இணைந்து வழங்கும் தெய்வீக இசை அரங்கில் இன்று இரவு 8 மணிக்கு செல்வி அம்பிகை வைரவநாதனின் வீணை இசையும், 8.45 மணிக்கு திருமதி வாஸஸ்பதி ரஜிந்திரனின் பாட்டும் இடம் பெறும். (ஐ-14)

## அணைக்கட்டு உடைக்கும் ஆபத்து

மின்னேரிய அணைக்கட்டு உடைப்பெடுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

அணைக்கட்டின் மதகுகளுக்கு கீழ் நீர் கசிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்தே மேற்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தப்பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

# செஞ்சிலுவைச் சங்க நிதி மோசடி குறித்து விசாரணை

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழல்கள் குறித்து சுகாதார அமைச்சு விரிவான விசாரணைகளை நடத்தி வருகிறது.

கடந்த ஆண்டு செஞ்சிலுவைச் சங்கத்திற்குக் கிடைத்த சுமார் 30 கோடி ரூபா வெளிநாட்டு நிதி தவறான வழியில் பயன்படுத்தப் பட்டிருப்பதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

மேற்படி நிதியல் அரைவாசித் தொகை பாதிக்கப் பட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லை என இதுவரை நடைபெற்ற ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (ஐ-6)

# மருத்துவ கண்காட்சியில் மக்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினரும், விஞ்ஞான மன்றமும் இணைந்து ஒழுங்கு செய்த ''சிறப்பான மருத்துவத் தகவல்கள் மூலம் சுகவாழ்வு'' என்னும் தலைப்பிலான அறிவியல் கண்காட்சி மருத்துவ பீடத்தில் நடைபெற்று வருகிறது.

கடந்த இரண்டாம் திகதி ஆரம்பமான அந்தக் கண்காட்சியை பெரும் எண்ணிக்கையான பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பார்வையிட்டு வருகின்றனர்.

எதிர்வரும் 9 ஆம் திகதி வரை கண்காட்சி தொடர்ந்து நடைபெறும்.

இறுதி நாட்களில் ஏற்படும் நெருக்கடியை தவிர்க்கும் வகையில் முன்கூட்டியே கண்காட்சியை பார்த்து பயன் பெறுமாறு பாடசாலை மாணவர்களையும் பொதுமக்களையும் கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-14)

# நாயை துரத்திய யானை தவறி விழுந்தது கிணற்றில்!

கொழும்பு, ஏப். 7

நாயைத் துரத்திவந்த காட்டு யானை ஒன்று கிணற்றில் விழுந்த சம்பவம் மின்னேரியா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காட்டுயானை ஒன்று குடிதண்ணீர் தேடி கிராமத்திற்கு வந்தது. அப்போது ஒரு நாயைக் கண்டது யானை அதை துரத்தி வந்த சமயம் யானை கிணற்றுக்குள் தவறி விழுந்துவிட்டது.

கிராம வாசிகளும் வனபரிபாலயத்திணைக்கள அதிகாரிகளும் கிணற்றின் ஒரு பக்க நிலத்தைப் படி போன்று வெட்டி அந்த யானையை மீட்டெடுத்தனர். (ஒ- 10)

# தவளையின் வயிற்றுக்குள் இருந்து ரத்தினக்கல் மீட்பு!

கொழும்பு, ஏப்ரல் 7

காணாமற்போன நீல இரத்தினக்கல் தவளை ஒன்றின் வயிற்றினுள் இருந்து பின்னர் மீட்கப்பட்டது.

இச் சம்பவம் அண்மையில் எகலிய கொட நகருக்கு அண்மையில் உள்ள கிராமம் ஒன்றில் இடம்பெற்றது.

பட்டை தீட்டிக் கொண்டிருந்த வேளை அந்த இரத்தினக்கல் தவறி விழுந்து காணாமற்போனது. பட்டை தீட்டிக் கொண்டிருந்தவர் அதனை எங்கும் தேடினார். அது கிடைக்கவில்லை.

அதனை அடுத்து அப் பகுதியில் காணப்பட்ட தவளை ஒன்றின் மீது சந்தேகம் எழவே அதனைப் பிடித்து அடைத்து வைத்தார்.

பின்னர் எங்கு தேடியும் அந்த இரத்தினக்கல் கிடைக்காததை அடுத்து — இரண்டு நாட்களின் பின்—

அந்தத் தவளையைக் கொன்று அதன் வயிற்றுப் பகுதியை வெட்டிப் பார்த்தபோது காணாமற்போன இரத்தினக்கல் அதற்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது. (ஐ-16)

மண் விடுதலை சந்திரிகாவின் கையில் இல்லை

# உணர்வு பூர்வமாக எழுதும் போது உண்மையான சுதந்திரம் வரும்

## தமிழ் விழாவில் புதுவை இரத்தினதுரை உரை

யாழ்ப்பாணம், ஏப். 7

அடுத்த தலைமுறைக்காவது சுதந்திரத்தின் அர்த்தம், அதன் பெறுமானம் தெரிய வேண்டும். ஏட்டிலும் பேச்சிலும் மட்டுமே சுதந்திரத்தைக் கண்ட நாங்கள் எமது அனுபவங்கள் ஊடாக உண்மையான சுதந்திரம் எது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். மண் விடுதலை சந்திரிகாவின் கையில் இல்லை. எப்போது நாம் உணர்வு பூர்வமாக எழுகிறோமோ அப்போது அது கிடைக்கும்.

யாழ். இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் தமிழ் விழாவிலும் சங்க மலர் வெளியீட்டுவிழாவிலும் பேசிய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்ச் சங்கத் தலைவர் செல்வன் சமுகுந்தன் தலைமையில் குமாரசாமி மண்டபத்தில் இந்த விழா நடைபெற்றது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை மேலும் பேசும் போது கூறியதாவது

மற்றைய மொழிகள் வரிவடிவம் பெறமுன்னர் நாங்கள் பெரிய இலக்கிய இலக்கண இதிகாசங்களை —

நீண்ட பாரம்பரியத்தை — கொண்டவர்களாக வாழ்ந்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?

எமக்கு வந்த இன்னல்களில் இருந்து விடுபட இன்று போராடிக் கொண்டிருக்கிறோம். விடிவைச் சுமந்து நிற்கும் ஒரு நாட்டை அவாவி நிற்கிறோம்.

### மொழியே நமது வாழ்வு

மொழி ஓர் இனத்தின், சமூகத்தின் பிம்பம். இந்த மொழியே நமது வாழ்வு, பண்பாடு, பாரம்பரிய நிலமாகிறது.

இது வெறும் சாதனமல்ல. இஸ்லாமிய இந்து அடிப்படை வாதங்களைப் போல் மொழி அடிப் படைவாதத்திற்குரியதல்ல.

இப்போது மொழி, இன, பண்பாட்டுக்கு ஏற்பட்ட ஆபத்தைப் பேசுவது கூட ஒரு பாபம் என்பது போல் ஓர் அச்சம், பயம் நிலவுகிறது.

மொழிக்கு ஆபத்தென்று சொல்ல முடியாத ஒரு நிலையில் இலக்கியம் இதிகாசத்திற்குரியவர் என்று சொல்வதில் பயன் என்ன?

உலகத்தில் பெரிய இலக்கியம் இருக்கிறது என்று சொல்லும் நாம் உன்னுடைய காலத்து இலக்கியத்தைச் சொல் என்றால் எதைக் காட்டுவோம்? தமிழ் இலக்கியம் மொழிகளில் நமக்குப் பாரிய வளர்ச்சி தேவை தமிழுக்கு விழா எடுப்பதில் பெருமையுண்டு தேவையுண்டு.

### போருக்கு அதிக விலை

இந்தமண்ணை சுபிட்சமுள்ளதாக சுதந்திரமுள்ளதாக ஆக்குவோம். இந்தப் போருக்கு அதிகம் விலை கொடுத்த பாடசாலை இந்தப் பாடசாலை. அடுத்த தலைமுறை நீ என்ன செய்தாய் என்று கேளாமல் நாம் தொடக்கி வைத்தோம் என்ற பெருமைவேண்டும்.

சுதந்திர தேவையைத் தொடும் உணர்வு வரும் போது மண்வாழும், தமிழ் வாழும்.

இவ்வாறு அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை பேசும்போது கூறியதாவது:

இன்று தமிழர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்வதால் சர்வதேச மொழியாகும் வாய்ப்பு உண்டு. மொழிவாழ மக்கள் அதனை விருப்புடன் கற்பதும் ஆரா[illegible] கொள்வதும் தேவை.

இங்கே பயி[illegible] மொழி, இலக்கியங்களை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டுள்ளனர் கம்பன் கழகம் போன்ற அமைப்புக்கள் எமது இந்த மொழி இலக்கிய வளர்ச்சிக்கு உதவுகின்றன. தமிழ் வளர்கிறது எனினும் அந்த வளர்ச்சியின் வேகம் போதாது.

எமது மொழியின் தனித்துவம் பேணப்படும் வகையில் இளந் தலைமுறை தமிழ் வளர்ச்சியில் அக்கறை கொள்ளவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசும்போது கூறியதாவது!

### தமிழுக்கு தமிழகத்தில் இடம் இல்லை

தமிழகத்தில் இன்று தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை.

ஆங்கிலத்திற்கும், வடமொழிகளுக்கும் மக்கள் வழங்கும் அந்தஸ்து அதிகரித்து வருகிறது.

கேரளம், ஆந்திர, கன்னட மாநிலங்கள் ஒரு காலத்தில் தமிழ் பேசும் பகுதியாக இருந்தன. அங்கே அந்நிய மொழிகள் புகுந்து கொண்டதால் அவை இப்போது பிற மொழி பேசும் மாநிலங்களாக மாறிவிட்டன.

இன்றைய போராட்டம் எமது மொழி பண்பாடு தாயகத்தைக் காப்பதற்காக நடைபெறுகிறது. அது அர்த்தம் நிறைந்ததாக இருக்க நாம் எமது மொழியின் வளர்ச்சிக்கு பணியாற்றவேண்டும்.

இவ்வாறு அவர் பேசும் போது கூறினார்.

முதறிஞர் க. சொக்கலிங்கம் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், தமிழ்ச் சங்க அமைப்பாளர் திரு. த. சிவகுமாரன், செல்வன் இ. [illegible] வரன், கலாநிதி க. குண[illegible]

# சந்தேகத்துக்கு விலை நிம்மதி....?

ஓர் ஊரில் ஒரு குருவி இருந்தது. அந்தக் குருவி ஒரு நாள் ஒரு கனவு கண்டது.

அந்தக் கனவில் அதற்கு ஓர் அற்புதமான உலகம் தெரிந்தது.

அந்த உலகத்தில் கவலை இல்லை — துன்பம் இல்லை— சுமைகள் எதுவும் இல்லை! மிகவும் சந்தோஷமான உலகம் அது.

அப்படி ஓர் உலகம் இருந்தால் யாருக்குத்தான் அங்கே போக வேண்டும் என்ற ஆசை ஏற்படாது?

இந்தக் குருவிக்கும் அப்படி ஓர் ஆசை வந்தது.

எப்படியாவது அங்கே போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்ற ஆசை. சரி...எப்படி போவது?

அந்தக் குருவி சோதிடர் ஒருவரிடம் போயிற்று.

''ஐயா... இப்படி ஒரு சந்தோசமான உலகத்தை நான் கனவில் பார்த்தேன். அந்த இடத்திற்குப் போய் விட வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசையாக இருக்கிறது. ஆனால் அதற்கு வழிதான் தெரியவில்லை. அங்கு எப்படிப் போவது என்ற விவரத்தை நீங்கள்தான் எனக்குச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டது.

அதற்கு அந்த சோதிடர், ''அந்த உலகத்திற்குப் போவதற்கு உரிய முழு வழியும் எனக்குத் தெரியாது. கொஞ்ச தூரம் வரையில் தெரியும். அதை மட்டும் வேண்டுமா வேண்டுமானால் உனக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். ஆனால் அதற்கு நீ எனக்குத் தட்சனை கொடுக்க வேண்டும்'' என்றார்.

''சரி, என்ன வேண்டும்?'' என்று குருவி கேட்டது.

''எனக்குத் தட்சணையாக நீ உன் உடம்பில் இருக்கும் இறகுகளில் ஒன்றைப் பிய்த்துக் கொடுக்க வேண்டும்!'' என்று சோதிடர் கேட்டார்.

'சரி ... ஒரு இறகுதானே... கொடுத்து விடுவோம்'' என்று நினைத்து குருவி தன் உடம்பிலிருந்து ஒரு சிறகைப் பிய்த்து சோதிடரிடம் கொடுத்தது.

அதை வாங்கிக் கொண்ட சோதிடர் தனக்குத் தெரிந்த வரையில் வழி சொன்னார்.

வழியைக் கேட்டுக் கொண்டு அந்தக் குருவி பறந்து போயிற்று.

நீண்ட தூரம் பறந்தது. வழியில் களைப்பாக இருந்ததால் அது ஒரு மரத்தில் சென்று உட்கார்ந்தது.

அந்த மரத்தில் ஒரு பாம்பு இருந்தது.

அந்தப் பம்பிடம் இந்தக் குருவி, ''சந்தோசமான உலகத்தைத் தேடி நான் பறந்து

### ஞானக்கதிர்

போய்க் கொண்டிருக்கிறேன்'' என்று தன் கதையைக் கூறியது.

அதைக்கேட்டதும் பாம்பு, ''மீதிவழி எனக்குத் தெரியும்.. அதை நான் உனக்குச் சொல்ல வேண்டுமானால்... என் இறகுகளில் ஒன்றை நீ எனக்குக் கொடுக்க வேண்டும்'' என்று கூறியது.

உடனே குருவி இன்னோர் இறகைப் பிய்த்துப் பாம்பிடம் கொடுத்து... மேற்கொண்டு போக வேண்டிய வழியைக் கேட்டுத் தெரிந்து கொண்டது.

மறுபடியும் பறக்க ஆரம்பித்தது.

இப்படி அந்தக் குருவி பறந்து சென்று கொண்டே இருந்தது. அங்கங்கே ஒவ்வொருவரிடமும் வழி கேட்டுத் தெரிந்து கொண்டது. ஒவ்வொருவருக்கும் அது தன்னுடைய ஒவ்வோர் இறகைப் பிய்த்துக் கொடுக்க வேண்டியதாயிற்று!

கடைசியில் ஓர் இடத்திற்கு வந்து சேர்ந்தது. அங்கிருந்து பார்த்தால் சிறிது தூரத்தில் அது கனவில் பார்த்த அந்த சந்தோச உலகம் தெரிந்தது. அந்த உலகத்தின் வாசல் அதன் கண்ணில் பட்டது.

ஆனால் அந்தக் குருவியால் மேற்கொண்டு பறக்க முடியவில்லை. ஏனென்றால் இப்போது அதன் உடம்பில் சிறகுகளே இல்லை.. எல்லாம் பறிபோய் இருந்தது. அங்கங்கே வழி கேட்கும் போது எல்லாவற்றையும் அது பிய்த்துக் கொடுத்து விட்டது. ஆதலால் இப்போது அதற்கு வெறும் உடம்பு மட்டும்தான் இருந்தது. அந்த நிலையில் குருவி நிமிர்ந்து பார்த்தது. இன்னும் சிறிது தூரம் சென்றால் அந்த உலகத்திற்குப் போய் சேர்ந்து விடலாம்.

ஆனால் பறப்பதற்கு இப்போது அதற்கு சிறகு இல்லையே! என்ன செய்வது?

கையை காலை உதறுவது போல் அது படபடவென்று அடித்துக் கொண்டது. பறக்க முடியவில்லை. கதறிக் கதறி துடித்தது — சோர்ந்து போய் தரையில் விழுந்தது.

எட்டாத தூரத்தில் தெரியும் அந்த சந்தோசமான உலகத்தின் வாசலைப் பார்த்தபடியே உயிரை விட்டது!

இந்தக் கதையை குரு ஒருவர் தமது சீடனிடம் கூறிவிட்டு, ''மனிதன் நிலையான இன்பத்தை—நிம்மதியை விரும்புகிறான், ஆனால் அதை அடையக்கூடிய முயற்சியில் அவன் தன்னுடைய சிறகுகளையே பிய்த்து எறிந்து விடுகிறான். இது தான் அந்தக் கதைக்கு விளக்கம்'' என்று தெரிவித்தார்.

இந்த உலகத்தில் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று தான் பலரும் திருமணம் செய்து கொள்கிறார்கள். ஆனால் அந்த சந்தோசத்திற்கு விலையாக நிம்மதியைக் கொடுக்க வேண்டியதாகி விடுகிறதே!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்திவைப்பு

நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த யாழ். றோட்டறிக் கழகத்தின் 54 ஆம் ஆண்டு நிறைவு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

54 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்றவர்கள் இதனை கவனத்தில் கொள்ளவும்.

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [சி/915]


# பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு இம்முறை தீவுப்பகுதிக்கு அதிகம்

யாழ்ப்பாணம், ஏப். 7

வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கு இவ்வருடம் தீவுப் பகுதிக்கு கூடுதல் நி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் கொழும்பில் நடந்த யாழ் தேர்தல் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மொத்தமாக 250 லட்சம் ரூபா அபிவிருத்திக்கு வழங்கப்படுவது வழக்கம்.

கொழும்பில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி —

யாழ். மாவட்ட நிர்வாகப் பிரிவுக்கு 75லட்சம் ரூபாவும்—

தீவுப்பகுதி நிர்வாகப் பிரிவுக்கு 72 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் —

கிளிநொச்சி நிர்வாகமாவட்டத்துக்கு 50 லட்சம் ரூபாவும் —

யாழ் தேர்தல் மாவட்டத்துக்கு வெளியேயுள்ள மாவட்டங்களுக்கு 52 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் — ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்தி, சுற்றாடல் அபிவிருத்தி, கடற்தொழில் நீர்ப்பாசனம், போன்ற விடயங்களுக்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீதி அமைப்பு புதிய கட்டடம் அமைப்பு ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

(இ-3)

## பலத்த---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்க விசேஷ பொலீஸ்குழு ஒன்றை ஈடுபடுத்தியுள்ளனர்.

சயனைட் அருந்திய இளைஞனின் உடல் நிலை தேறிய பின்னர் அவரிடமிருந்து பல முக்கியமான தகவல்களைப் பெற முடியும் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(இ-?)

## மின்னலுக்கு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின்னல் தாக்கியதாகவும் இளைஞன் மின்னலால் தாக்குண்டு கிணற்றுக்குள் விழுந்ததாகவும் கூறப்படுகிறது.

இறந்தவர் பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து சுன்னாகத்தில் வசித்து வந்த செல்வரட்ணம் செந்தில்குமரன் [வயது 18] என்று தெரிவிக்கப்பட்டது.

[இ-4 89]

## விடுதலைப் புலி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரப் பரவல் குறித்து முடிவு செய்ய இயலும்.

அதன் பின்னரே அரசமைப்பில் அதிகாரப் பரவல் பற்றிய அம்சத்தைச் சேர்த்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் — என்று அமைச்சர் பதிலளித்தார். [அ-7)

## சிறு, சிறு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் இன்னும் சிறிது காலத்திற்கு நீடிக்கப்படவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

விவாதத்தை ஆரம்பித்து வைத்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்ன, மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை அமுல் செய்வதன் மூலம் வடக்கு கிழக்கு பகுதிகளில் வன்முறைச் சம்பவங்களை தவிர்த்துக் கொண்டது மகிழ்ச்சிக்குரியது என்றார்.

எனினும் கண்காணிப்புக் குழுவை அமைப்பது உட்பட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை நடைமுறைப் படுத்துவது குறித்து அரசு கவனம் செலுத்தவேண்டும். என்றும் கேட்டுக்கொண்டார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்புப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது (இ-14)

## பாடசாலைகள் இன்று விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப். 7

பாடசாலைகள் அனைத்தும் முதலாம் தவணை விடுமுறைக்காக இன்று 7 ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும் இம்மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாம் தவணைக்காக திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ-117]

## விளையாட்டு நிகழ்வு

மயிலணி, ஏப். 7

சுன்னாகம் அம்பாள் விளையாட்டுக்கழகம் சுன்னாகம் புகையிரத நிலைய மைதானத்தில் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய நிகழ்வுகள்.

புத்தூர் கலைமதி ''ஏ'' வி. க எதிர் தம்பாட்டி காந்திஜி வி. க.

யாழ். பவானி வி. க. எதிர் இணுவில் இந்து வி. க.

புத்தூர் கலைமதி ''பி'' வி. க. எதிர் சிறுப்பிட்டி அண்ணா வி. க. [இ-89]

## அரச அதிபர் ஊடாக..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளைச் சந்தித்தனர். நிவாரணம் கிடைப்பதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரதிநிதிகளாகச் சென்ற எட்டுப்பேரும், கல்வி உயர் கல்வி அமைச்சரைச் சந்தித்து தமக்கு உண்டான பாதிப்பை விளக்கினர். அத்தோடு நிற்கவில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்தார்கள்.

தமது நிலையை எடுத்துச் சென்னார்கள். தாம் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியதையும், ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியதையும் ஞாபகப்படுத்த முனைந்தார்கள்

அப்போது, ஜனாதிபதி சந்திரிகா கூறியது கேட்டு அவர்களுக்குத் தலைசுற்றுவது போல இருந்ததாம்

''நீங்கள் பேரணி நடத்தியதும் தெரியாது. நீங்கள் அனுப்பியதாகக் கூறிய மகஜர் எனக்கு கிடைக்கவுமில்லை''— என்றவாறு தெரிவித்த ஜனாதிபதி—

மகஜர் கிடைத்திருந்தால் நான் நடவடிக்கை எடுத்திருக்க முடியும். பதிலாவது அனுப்பியிருப்பேன் — என்றும் கூறினார்.

ஜனாதிபதிக்குரிய மகஜரை தாம் யாழ் அரச அதிபரிடம் கையளித்த விவரத்தை மாணவர்கள் தெரிவித்தனர்.

அந்த மகஜருக்கு என்ன நடந்தது என்பது குறித்துக் கண்டறியுமாறு தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி, யாழ் அரச அதிபர் அப்போது (ஏப்ரல் முதலாம் திகதி) எங்கே இருக்கிறார் என்று மாணவர் பிரதிநிதிகளிடம் வினவினாராம்!

மார்ச் மாதம் 8 ஆம் திகதி தாம் பேரணி நடத்திக் கையளித்த மகஜர் ஏப்ரல் முதலாம் திகதி வரை ஜனாதிபதிக்குக் கிடைக்கவில்லை என்பதனை நம்புவதற்கு தம்மால் முடியவில்லை என்றும் —

சம்பந்தப்பட்டோர் மௌனம் சாதிக்காது உண்மையை வெளிப்படுத்த முன்வரவேண்டும் என்றும் —

பாதிக்கப்பட்ட மாணவர் பிரதிநிதிகள் கொழும்பில் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

அரசியல் முக்கியத்துவம் மிக்க — மாணவர் சம்பந்தப்பட்ட — ஒரு விடயத்தில் மாணவர்களின் எழுச்சியை அரசுத் தலைவருக்கு தெரியப்படுத்தி சரியான நடவடிக்கை எடுக்க அரசைத் தூண்ட வேண்டியவர் அதைச் செய்யாமல் — வெறுமனே சம்பளத்தை நோக்காகக் கொண்டு பதவிக் கதிரையில் குந்தியிருப்பதோ —

அல்லது ஆகக் கூடியது தபால் சேவகன் போல உரிய செய்தியை உரிய இடத்துக்கு சேர்ப்பிக்கச் செய்வதை கூட உறுதிப்படுத்த முடியாத நிலையில் பணியாற்றுவதோ —

விசனத்துக்குரியது என அந்த மாணவர்கள் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதி செயலகத்துக்கு அந்த மகஜர் உரிய நேரத்தில் — உரிய முறையில் அனுப்பப்பட்டிருக்குமானால் —

முக்கிய விடயம் சம்பந்தமான தகவலை — மகஜரை— அரசின் உயர் பீடத்தின் கவனத்துக்கு உரிய முறையில் — வலியுறுத்தலுடன் — கிடைப்பதற்கு யாழ். செயலக அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்குமானால்—

அதுபற்றிய தகவலை வெளிப்படுத்தி, உண்மை நிலையை சம்பந்தப்பட்ட மக்களுக்கு — மாணவருக்கு — தெரியப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி, தமிழ் மாணவர்களைச் சந்தித்த போது பொய் கூறியிருப்பாரேயானால் அதனை எங்கள் பக்க தமிழ் அதிகாரிகள் அம்பலப் படுத்துவார்களா? — என்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

(உ-9)


# துணிப் பூங்கா

வழங்கும்

## புதுவருட மலிவு விற்பனை

| | |
|---|---|
| டொட்ஸ் துணிகள் | 44'' |
| சபையர் துணிகள் | 44'' |
| பலஸ் துணிகள் | 44'' |
| ஸ்ரைப் துணிகள் | 44'' |
| ரீஜின் சூட்டிங் துணிகள் | 44'' |

05-04-1995 முதல்
10-041995 வரை மட்டுமே
நடைபெறும்என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
மலிவிற்குத் தெரிவிற்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்

## துணிப் பூங்கா

158, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

[சி-957]


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சக்திவேல்

(ஓய்வு பெற்ற குடியேற்ற அதிகாரி)

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சக்திவேல், 1995-04-06 ஆம் திகதி காலமாகி விட்டார்.

இவர் நீலாம்பரத்தின் [ராணி] அன்புக் கணவரும், குமாரதாஸின் [லண்டன்] அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற ரங்கூன் C. P. திருவிளக்கத்தின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற குலசேகரம், மகேஸ்வரி பத்மநாயகம் [லண்டன்], தங்கரத்தினத்தின வேல் செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகாம்பரம் சோமநாதன் [கனடா], பாலச்சந்திரன், இரங்கநாதன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை [95-04 07] பி. ப 1 00 மணிக்கு அளவெட்டி தெற்கில் அன்னாரினது இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்

மைத்துனர்
தி. பாலச்சந்திரன்
(ரங்கூன்பாலா)

மனைவி
நீலாம்பரம்
(ராணியக்கா)

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. [8313]

## செல்வரட்ணம் செந்தில்குமரன்

பலாலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் செந்தில்குமரன் நேற்று அகாலமரணமானார்.

இவர் செல்வரட்ணம் - சரோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மகனும், செல்வக்குமரன் [ஹொலண்ட்], உசாநந்தினி, தீபநந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தம்பிராசா [சுன்னாகம்], காலஞ்சென்ற சிவராசா, மற்றும் நாகராசா [ஹொலண்ட்], யோகராசா [ஹொலண்ட்], பாமராசா [ஹொலண்ட்] ஆகியோரின் அன்பு மருமகனும், யோகராணி, செல்வராணி, வசந்தராணி [பிரான்ஸ்], வீரசிங்கம் [சுவிஸ்] ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [7. 4. 95] வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்ற, பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சரோஜினிதேவி
[தாய்]

வரியப்புலம்,
அம்மன் கோவிலடி,
சுன்னாகம். [36104]

## தர்மராசா தங்கவேலாயுதம்

வின்ஸ் உதயா இன்டஸ்றீஸ் உரிமையாளர் தர்மராசா தங்கவேலாயுதம் 6- 4- 95 இல் காலமானார்.

அன்னார் மகாலட்சுமியின் அன்புக்கணவரும், உதயகுமார் (நோர்வே), உதயசங்கர் (சங்கர் வாட்ஸ் வேக்ஸ், மந்திகை), உஷா (ஜேர்மனி), சியாமளா [கொழும்பு], உதயபாஸ்கரன் (வின்ஸ் உதயா இன்டஸ்றீஸ்), யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையும். ரவிதரன் (ஜேர்மனி), ஜெயபாலன் (கொழும்பு), சதீஸ், கௌரி, சாரதா, சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், இராமநாதன், ஞானாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தென்புலோலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நேற்று [வியாழன்] மாலை ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;
உதயசங்கர்
(மகன்)

(36103)

# மரண அறிவித்தல்கள்

## சுவாமிநாதர் வேலாயுதபிள்ளை

சண்டிலிப்பாய் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த சுவாமிநாதர் வேலாயுதபிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு திருமதி சுவாமிநாதர், தங்கம்மா ஆகியோரின் அன்பு மகனும், அன்னம் [சண்டிலிப்பாய்], காலஞ்சென்ற பாக்கியம் [சண்டிலிப்பாய்], காலஞ்சென்ற தியாகராசா [கோண்டாவில்] மற்றும் நடராசா (கொழும்பு) சிவரத்தினம் [சண்டிலிப்பாய்] ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி இளமுருகன்
[பெறாமகன்]

[36098]

## பறுநாந்து தேவசகாயம்

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பறுநாந்து தேவசகாயம் (ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்) 6- 4- 95 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பேர்ணபேற்றின் அன்புக்கணவராவார். இவரது நல்லடக்கம் இன்று 7 - 4 - 95 வெள்ளிக்கிழமை காலை 9 30 மணிக்கு ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்
A. R. சந்தியாப்பிள்ளை
[மைத்துனர்]

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. [36084]

## வள்ளிப்பிள்ளை செல்லையா

மீசாலை வடக்கைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை செல்லையா 5-4-95 புதன்கிழமை காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும், புஷ்பலீலாவதி [ஆசிரிய ஆலோசகர் சங்கீதம்], சிவபாதசுந்தரம் [கட்டட ஒப்பந்தகாரர்], புஷ்பராணி [ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் ம. வி.], புஷ்பநிதி, சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னம்பலநாதன் [ஓய்வுபெற்ற மலேரியா வெளிக்கள உத்தியோகத்தர்], நவரத்தினம் (பட வரைஞர், நீர்ப்பாசன இலாகா - முருங்கன்), விநாயகமூர்த்தி, நவநீதவல்லி [ஆசிரியை சாவ. இந்துக் கல்லூரி], சறோஜினி ஆகியோரின் மாமியாரும், சரவணமுத்து [ஓய்வுபெற்ற சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்] மீனாட்சிப்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியை கனடா], திருநாவுக்கரசு [ஓய்வுபெற்ற ஆசிரியர்], பாக்கியலட்சுமி ஆகியோரின் சகோதரியும், தியாகரூபன், ஆதிசன், கயல்விழி, பிரணவன், மலர்விழி, சங்கீதா (யா/வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), வேணுகானன், வாகீசன், விமலன், விபுலன், றோஷானி, ஷாலினி நிரோசினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 8-5-95 நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
பிள்ளைகள்.

மீசாலை வடக்கு,
மீசாலை. [(36078]


# யாழ். றோட்டறிக் கழகத்தின்

# 54 ஆம் ஆண்டு நிறைவையொட்டி

# ★ மாபெரும் அஞ்சலோட்ட நிகழ்வு ★

## யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில்

நாளையும், நாளை மறுதினமும் (8ஆம், 9ஆம் திகதிகளில்) காலை 8-30 முதல்

நிகழ்ச்சி அமைப்பு: யாழ். மாவட்ட அமெச்சூர் மெய் வன்மைச் சங்கம்

★ அனைவரும் வருக! ★ கண்டு களிக்குக!!

(சி/916)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07 - 04 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது